# இயேசு வந்த வீட்டில்



திருமறை அறிஞர்

Dr. A. கிறிஸ்டோபர்

# இயேசு வந்த
# வீட்டில் !

(குடும்பத்தை கட்டும் சத்தியங்கள்)

ஆசிரியர்
திருமறை அறிஞர்
Dr. **அ.கிறிஸ்டோபர்**

வெளியிடுவோர்
**வின்னக அப்பம்**
நேரு வீதி,
சூரம்பட்டி, ஈரோடு – 9.

RE-EDITION - May 2007
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 7

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediff.com**

## படைக்கிறேன்

விண்ணுலக குடும்பத்தின் நடுநாயகரே!
மண்ணுலக குடும்பத்தின் திருநாயகரே!
எமைக்குடும்பமாய் இணைத்திட்ட பெருநாயகரே!
நின்சித்தம் செய்திட அருள்தாருமே.

தளராதெமை சுமக்கும் தந்தையானவரே!
தணியா அன்பு பொழியும் அன்னையானவரே!
உடன்சுதந்தரம் எமக்களித்த தமையனானவரே!
நின் சித்தம் செய்திட அருள்தாருமே!

நடுவானில் வரப்போகும் மணவாளனே!
குடும்பமாய் உமைக்காண வரம்தாருமே!
இடும்பைசூர் இவ்வுலகில் இந்நூலால்–
தடுமாறா வாழ்வுசெய்ய வளம் சேருமே!

ஆக்கியோனும் அர்ப்பணிப்போனும்
**அ. கிறிஸ்டோபர்**



## பொருளடக்கம்


1. குடும்பம் – ஓர் அறிமுகம்!
2. பெற்றோர்களே!
3. புருஷர்களே!
4. மனைவிகளே!
5. முடிவுரை

# 1

# குடும்பம் – ஓர் அறிமுகம்!

'குடும்பம்' என்ற வார்த்தையை எந்த மொழியில் சொன்னாலும் அது உச்சரிப்பிலும் உணர்விலும் ஒப்பற்ற வார்த்தையாயிருக்கும். காரணம் இந்த முழு உலகத்தின் அடிப்படையே குடும்பம் என்ற வார்த்தையில் அடங்கியிருக்கிறது.

பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற வார்த்தைகள் பரலோகக் குடும்ப உறவைக் காண்பிக்கிறது. தேவன் மனிதரை சிருஷ்டித்தபோது குடும்பமாக அவர்களை வைத்தார். வார்த்தையானவர் இத்தரையில் உதித்தபோது யோசேப்பு மரியாள் குடும்பத்தில் பிறந்தார். தமது இரத்தத்தை சிந்தி நம்மை மீட்டபோது நம்மைக் குடும்பமாக (வீட்டார் எபேசி 2:19) இணைத்திருக்கிறார். தாம் மகிமையின் வருகையில் சபையை சேர்த்துக்கொள்ளப் போவதை மணவாளன் மணவாட்டி என்று குடும்ப உறவுக்கு உருவகப்படுத்தியிருக்கிறார்.

எனவே குடும்பம் தேவனால் உண்டாக்கப்பட்டது. தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. தேவனால் அங்கீகரிக்கப்பட்டது. இதனை உணர்ந்து நமது குடும்பங்களை தேவன் விரும்பும் கிறிஸ்தவக் குடும்பமாக நடத்த வேண்டியது அவசியம்.

ஒருமுறை பிசாசும் அவனுடைய தூதர்களும்



ஒரு அவசரக்கூட்டம் நடத்தினார்கள். சபைகள் வளர்வதை தடுப்பது எப்படி? என்ற கருத்தாய்வு நடத்தப்பட்டதாம். பல குட்டிப் பிசாசுகள் சொன்ன எந்த ஆலோசனையும் சாத்தானுக்குப் பிடிக்கவில்லை.

அப்பொழுது இன்னொரு குட்டிப்பிசாசு அற்புதமான ஆலோசனை சொன்னானாம். "சபையைக் கெடுக்க நாம் சபைக்குள் நுழையக்கூடாது. மாறாக முதலாவது கிறிஸ்தவக் குடும்பத்திற்குள் நுழைய வேண்டும். அங்கே நாம் நுழைந்து விட்டால் சபையை சுலபமாக சீரழித்து விடலாம்" என்ற உடனே, அபாரம்! அபாரம்! உடனே புறப்படுங்கள் என்று சாத்தான் தன் சேனைகளுக்கு கட்டளை கொடுத்தானாம். ஆம்! ஒரு குடும்பத்தின் சீரழிவு கிறிஸ்தவத்தின் ஒட்டுமொத்த சீரழிவு என்பதை உணருதல் அவசியம்.

இயேசு நமது வீட்டில் வருவாரானால் அது 'குடும்பமாக' இருக்கும். இயேசு வராமல் போவாரானால் அது 'குழப்பமாக' இருக்கும்.

கர்த்தருடைய நாள் வெகு சீக்கிரமாய் இருப்பதை நாம் அறியத் தவறினாலும் தனக்கு கொஞ்ச நாள்தான் உண்டென்று சத்துரு தெளிவாக உணர்ந்து விட்டபடியால் தன் முழு சேனையோடும் வெகு உக்கிரத்தோடும் கிறிஸ்தவக் குடும்பங்களோடு யுத்தம் செய்யப் புறப்பட்டிருக்கிறான். இந்நிலையில் அவனுடைய அக்கினியாஸ்திரங்களை ஆவியின் பட்டயத்தினாலும் அன்பின் கட்டுகளினாலும் ஒருமைப்பாட்டின் ஆவியினாலும் நிறைந்தவர்களாய் அவனோடு போரிட்டு அவனைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து கிறிஸ்துவுக்குள் புதிதான புனிதமான குடும்பத்தை கட்டும்படி சில ஆலோசனைகளை தொடர்ந்து உங்களுக்கு இப்புத்தகத்தில் எழுத விரும்புகிறேன்.

# 2

## பெற்றோர்களே !

பரலோகத்தில் நமக்கு பிதா இருப்பதுபோல் உங்களை உங்கள் பிள்ளைகளுக்கு பெற்றோராக தேவன் வைத்திருக்கிறார் என்பதை முதற்கண் நீங்கள் உணருதல் அவசியம்.

உங்களை இணைத்தது பிள்ளைகள் பெறும்படி மாத்திரமல்ல. 'பரிசுத்தமுள்ள' சந்ததியைப் பெறும்படி (மல்கியா 2:15) என்பதை நீங்கள் சிந்தையில் வையுங்கள் இந்த உலகத்தை முழுமையாக தனது ஆளுகைக்குள் வைத்திருக்கும் பிசாசுக்கு முன்பாக முழங்கால்களை முடக்காத பரிசுத்த சந்ததியைப் பெறும்படியும், வளர்க்கும்படியும் தேவன் உங்களை நியமித்திருக்கிறார்.

உங்கள் பிள்ளைகள் மாம்ச சித்தத்தினால், மாம்ச பெலத்தினால் பிறந்தவர்கள் அல்லர். அவர்கள் தேவனால் நேரடியாக உங்களுக்கு அருளப்பட்டவர்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். யாக்கோபு, ஏசா முன்பாகத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும்போது தனது பிள்ளைகளைக் காட்டி, 'தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள்' என்றார் (ஆதி 33:5). அப்படியே யோசேப்பு தன் குமாரரை தன் தகப்பனிடத்தில்



அறிமுகம் செய்யும் போது, 'இவ்விடத்தில் தேவன் எனக்கு அருளின குமாரர்' (ஆதி 48:9) என்றார்.

அப்படியே தீர்க்கதரிசியாகிய ஏசாயா தனது குடும்பத்தைக் குறித்து சொல்லும்போது (ஏசாயா 8:18) 'இதோ நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்...' என்கிறார். எனவே உங்கள் பிள்ளைகள் கர்த்தரால் உங்களுக்கு அருளப்பட்டவர்கள் என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

ஏசாயா தனது குடும்பத்தைக் குறித்து சொல்லும்போது "நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலிலே அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" (ஏசாயா 8:18) என்கிறார். இந்தச் சாட்சி ஒவ்வொரு குடும்பத் தலைவரும் தைரியமாய் சொல்ல வேண்டும். உங்கள் பிள்ளைகள் நீங்கள் வசிக்கும் பகுதியிலும் நீங்கள் அங்கம் வகிக்கும் சபையிலும் மகிமையின் ஆண்டவருக்கு அடையாளங்களாக அற்புதங்களாக இருக்கிறார்களா? ஆம் என்றால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இல்லையென்றால், இலைகளால் நிறைந்து இயேசுவுக்கு கனிதராத அத்திமரங்கள். நீங்கள் வளர்ந்திருக்கிறீர்களே தவிர உங்களால் தேவனுக்கும் தேவனுடைய சபைக்கும் எந்தப் பிரயோஜனமுமில்லை.

இன்று துவக்கி உங்கள் குடும்பத்தைக் குறித்து சரியான தரிசனம் உங்களுக்கு உண்டாக வேண்டும் என்று விரும்புகிறேன். இன்றைய பிள்ளைகள்

நாளைய பெற்றோர்கள். எனவே அவர்களை செவ்வையான வழியில் நடத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு. கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று கடமையை தள்ளிப் போடாதீர்கள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை சரியாக வளர்க்கத் தவறினால், கர்த்தர் உங்களை பார்த்துகொள்வார்(?) என்ற பயத்தோடு குடும்பத்தைக் கட்டிக் காக்க பிள்ளைகளைக் குட்டிக் கடிந்து வளர்க்க தீவிரப்படுங்கள்.

பிள்ளைகளுடைய வளர்ச்சி மிக முக்கியம். வளர்வது வேறு; வளர்க்கப்படுவது வேறு. உணவு உடை நீங்கள் கொடுத்துவிட்டால் வருடங்கள் கூடக்கூட வளர்ந்து கொண்டே போவார்கள். அதுவல்ல முக்கியம். அவர்கள் வளர்ச்சிக்கு ஒப்ப, மனநிலை, மார்க்கநிலை இவைகளில் முதிர்ச்சி அடைதல் அவசியம்.

இயேசுவானவர் (லூக்கா 2:52) ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் என்று எழுதியிருக்கிறது. இதுதான் சரியான வளர்ச்சி. இயேசுவினுடைய வளர்ச்சியில் நான்கு பரிமாணங்களை பார்க்கிறோம். முதலாவதாக ஞானத்திலும்(Mentally) இரண்டாவதாக வளர்த்தியிலும் (Physically) மூன்றாவதாக தேவ கிருபையிலும் (Spiritually) நான்காவதாக மனுஷர் தயவிலும் (Morally) விருத்தி அடைந்தார். இந்த நான்கு பரிமாணங்களும் உங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படவேண்டும். அப்படி இல்லையென்றால் அவர்கள் எத்தனை அழகாக



இருந்தாலும் ஊனர்களே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

அநேக பெற்றோர் தங்கள் பிள்ளைகள் உயரமாக வளர வேண்டும். உயர்ந்த படிப்பில் வளர வேண்டும் (அதாவது முதல் இரண்டிலும்) என்று யோசிக்கிறார்களே தவிர பிந்தின இரண்டைக் குறித்து அக்கறையில்லாமல் இருக்கின்றனர். இரண்டுகால் இல்லாத நாற்காலி எப்படி நிற்கிறதோ அப்படியே அடுத்த இரண்டு பரிணாமமும் இல்லாத உங்கள் பிள்ளைகளும் நிலைநிற்பது அரிது.

**பிள்ளைகளுக்கு மாதிரியாக இருங்கள்:–**

I தீமோத்தேயு 3:4–ல் தேவனுடைய மனுஷன் ‘தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர் களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாய் இருக்க வேண்டும்’ என்று எழுதியிருக்கிறது. தகப்பனானவர் இரண்டு காரியம் செய்ய வேண்டும். ஒன்று நல்லொழுக்கமுள்ளவர்களாய் வளர்க்க வேண்டும். இரண்டாவது உங்கள் பிள்ளைகளை கீழ்ப்படியப்பண்ணுகிறவர்களுமாய் இருக்கவேண்டும்.

வசனத்தை நன்றாய் கவனியுங்கள். இயற்கையில் பிள்ளைகள் கீழ்ப்படியமாட்டார்கள். அவர்கள் கீழ்ப்படியவில்லை என்று விட்டு விலகிவிடாதீர்கள். பெற்றோராகிய நீங்கள் பவுல் சொல்லுகிறபடி கீழ்ப்படியப்பண்ணுகிறவர்களாய் இருக்க வேண்டும். அப்படி செய்ய முடியாவிட்டால் அப்பா, அம்மா என்ற ஸ்தானத்திற்கு நீங்கள் தகுதியில்லாதவர்கள். கோபப்படாமல் சற்று உங்களை

ஆராய்ந்து பார்த்து கர்த்தரோடு ஒப்புரவாகி அந்தக்கிருபையை பெற்றுக்கொள்ளுங்கள்.

எதை விதைக்கிறீர்களோ அதை அறுப்பீர்கள். அறுவடையின் நிலங்கள் உங்கள் பிள்ளைகளே. நீங்கள் தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கிறீர்களோ அவைகளே உங்கள் பிள்ளைகள் மூலமாக பிரதிபலிக்கும். கூடுதலாக சொல்லப்போனால் உங்கள் சுயரூபத்தைக் காட்டும் முழு உருவக் கண்ணாடி உங்கள் பிள்ளைகள். ஆகவே அவர்களை வளர்க்க நீங்கள் பிரயாசப்படுவதற்கு முன் அவர்களுக்கு முன் நீங்கள் வளர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். பிள்ளைகள் படிக்கும் மிகச் சிறந்த மற்றும் திறந்த புத்தகம் பெற்றோர்களின் அனுதின வாழ்க்கையே.

உங்கள் ஆவிக்குரிய நிலையை விட உங்கள் பிள்ளைகள் உங்கள் மூலமாக உங்களைவிட ஒரு படியோ அல்லது ஒருபிடியோ கூட வளர மாட்டார்கள். ஆனால் உங்கள் பழக்கங்கள் அவர்களோடு கூட தொடர்ந்து வரும்.

ஆபிரகாம் தன்னுடைய சூழ்நிலைக்கு ஒப்ப தனது மனைவியை சகோதரி என்று அழைத்தான். அந்தப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளையினிடம் அதே சுபாவம் பிரதிபலித்தது. ஈசாக்கும் தனக்கு ஏற்பட்ட சூழ்நிலையில் ரெபேக்காளை தன் சகோதரி என்று சொன்னான். நியாயாதிபதிகளில் ஒருவனாகிய யெப்தா 'வாய் திறந்து சொல்லி விட்டேன்' என்று பொருத்தனை நிறைவேற்றத் துடித்தபோது அவன் பெற்றெடுத்த மகள் வாய் மூடிக் கொண்டு பொருத்தனையை நிறைவேற்றினாளாம்.



எனவே பிள்ளைகளுக்கு முன்பாக யோசனையோடு நடந்துகொள்ளுங்கள், யோக்கியமாகவும் நடந்து கொள்ளுங்கள். கிறிஸ்தவக் குடும்பத்தைச் சார்ந்த வெவ்வேறு வீட்டு இரண்டு பிள்ளைகள் அப்பா, அம்மா விளையாட்டு விளையாடினார்கள். அப்பா வேடத்தில் வந்த பையன் அம்மா வேடம் பூண்டிருந்த பெண்ணிடம் 'இந்தா சம்பளம்' என்று கொடுத்தானாம் அதை வாங்கிக்கொண்டு அப்பெண், 'யோவ் இவ்வளவுதானா சம்பளம்? பாதிப்பணம் எங்க போச்சு? யாருக்குக் கொடுத்த?' என்று நிறுத்தாமல் வசனம் பேச ஆரம்பித்தாளாம்.

அப்பா வேடம் போட்டிருந்த பையனுக்கு தர்மசங்கடமாய்ப் போய்விட்டது. 'கொஞ்சம் ஆட்டத்தை நிறுத்து நீ என்னெல்லாமோ பேசறியே எங்கப்பா சம்பளம் தந்தா எங்கம்மா உடனே ஜெபம் பண்ணுவாங்க நீ என்னடா என்றால் வசை பாடறியே' என்று வருத்தம் தெரிவித்தான். அதற்கு அவள் சொன்னாள், 'ஐயோ உங்க வீட்டுல அப்படி எங்க வீட்டுல எங்கப்பா சம்பளம் வாங்கிட்டு வந்தா எங்கம்மா வசை பாடும், எங்கப்பாவுடைய சட்டைப்பையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்.'

பார்த்தீர்களா! நீங்கள் எப்படியோ அப்படியே உங்கள் பிள்ளைகள் விளையாட்டிலும் இருப்பார்கள். எதிர் காலத்திலும் இருப்பார்கள். புகுந்தவீட்டிலும் இருப்பார்கள். உங்கள் குடும்பம் தேவன் வாசம் பண்ணுகிற வீடாக இருக்க வேண்டுமானால் குடும்பத்தலைவர் தரிசனமும் கரிசனமும் உடையவராய்

இருத்தல் அவசியம். உங்கள் குடும்பம் ஒரு மந்தை. பெற்றோர்கள், மேய்ப்பர்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு மந்தைக்கு மாதிரியாய் இருங்கள் என்று சொல்லுகிறார். எனவே உங்கள் வாழ்க்கை 'ஒரு மாதிரியாக அல்ல' ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

குடும்பத்தலைவர் பிள்ளைகளுக்கு அப்பா மாத்திரமல்ல, ஆசாரியனாகவும் இருக்க வேண்டும். யோபு தன் பிள்ளைகளுக்கு ஆசாரியராக பணிவிடை செய்தார். யோபு 1:5–இல் தன் பிள்ளைகள் விருந்து செய்கிறபோது அந்த நாளின் முடிவில் அவர்களை அழைத்து சர்வாங்க தகனபலிகளை செலுத்தி அவர்களை சரிபடுத்தி இருக்கிறார்.

யோபு 1:5–இல் மிக முக்கியமான பகுதி என்னவென்றால் யோபு 'அதிகாலமே எழுந்து' என்ற பகுதிதான் யோபு சீமானாக பொருளாதார ஆசீர்வாதமுள்ளவனாக ஒன்றுக்கொன்று சண்டைப் போட்டுக்கொள்ளாத பிள்ளைகளை உடையவனாக இருந்ததற்கு முக்கிய காரணம் அவன் அதிகாலமே எழுந்து ஆண்டவரைத் தேடுகிறவனாக இருந்தான். நீங்கள் அதிகாலமே எழுந்து ஆண்டவரைத் தேடுவதினால் புதிய கிருபைகளை கண்டு கொள்வது மாத்திரமல்ல, உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக மிக உயர்ந்து நிற்பீர்கள். இப்படியிருக்க உங்கள் பிள்ளைகள் உங்களுடைய வார்த்தையைக் கேட்டு அல்ல. உங்கள் முகத்தைப் பார்க்கும்போதே பயத்தோடும் கனத்தோடும் கீழ்ப்படிவர்.

புத்தக சந்தையில் சமைப்பது எப்படி? தைப்பது



எப்படி? என்று புத்தகம் இருப்பது போல பிள்ளைகளை வளர்ப்பது எப்படி? என்ற புத்தகமும் கிடைக்கிறது. அவைகளை வாங்கிப்படித்தால் ஒருவேளை உங்கள் பிள்ளைகளை சிவப்பாக வளர்க்க முடியுமே தவிர சிறப்பாக வளர்க்க முடியாது. உடல்வாகை உண்டாக்க முடியுமே தவிர உளவாகை ஊட்ட முடியாது.

கிறிஸ்தவப் பிள்ளைகளை வளர்ப்பதற்கு இந்த உலகத்தில் இதுவரை சாஸ்திரங்கள் வடிக்கப்படவில்லை. ஆனால் வேதத்தில் சாத்தியக்கூறுகள் வரையப்பட்டுள்ளது. நியாயாதிபதிகள் 13–ஆம் அதிகாரத்தில் 12–ம் வசனத்தில் மனோவாவும், அவன் மனைவியும் தங்களுக்குப் பிறவாத பிள்ளையைக் குறித்து இறவாத ஒரு ஜெபம் செய்தார்கள். அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும் அதை எப்படி நடத்த வேண்டும் என்று கேட்கிறார்கள். பிள்ளைகளை வளர்ப்பதற்கும் நடத்துவதற்கும் உகந்த ஆலோசனையை உன்னதத்திலிருந்துதான் பெற்றுக்கொள்ளமுடியும்.

மீண்டும் சொல்லுகிறேன் வேதம் சொல்லுகிறபடி (நியாயா 13:12) பிள்ளையை வளர்ப்பது வேறு பிள்ளையை நடத்துவது வேறு. பிள்ளையை வளர்ப்பது உடல் சம்பந்தமானது. (Physical feeding) பிள்ளையை நடத்துவது ஆவிக்குரியது (Spiritual leading) இவை இரண்டும் சமநிலையில் இருக்கும்போது சாட்சியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் வெளிப்படும் எனவே வளர்ப்பதற்கும், வழி நடத்துவதற்கும் தேவ சமூகத்தில் நில்லுங்கள். அவர் சொல்வதுபடியே செய்யுங்கள்.

அநேக குடும்பங்களில் பிள்ளைகளால் பிரச்சனை வரும்போது தாயானவள் முழுப் பொறுப்பையும் தகப்பன் மேல் போட்டு விடுகிறாள். எங்க வீட்டுக்காரருக்கு பிள்ளைகளைக் குறித்த அக்கறையே இல்லை. பிள்ளைகளை அவர் கண்டு கொள்வதே இல்லை என்று முழுப்பழியையும் கணவனார் மேலேயே போட்டு விடுகின்றனர். இது மிகவும் கண்டிக்க வேண்டிய ஒன்று. கணவனார் குடும்பத்தின் பாரங்களை சுமக்கிறார். குடும்பத்திற்காக வேலை செய்கிறார். குடும்பத்தைக் குறித்து சிந்தனையோடு வருகிறார். போகிறார். இந்நிலையில் பிள்ளைகளை வளர்க்கக்கூடிய பொறுப்பிருந்தும் போதுமான நேரமில்லாததால் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க முடியாதவராய் இருக்கிறார்.

இப்படிப்பட்ட குடும்பங்களில் தாயானவளுக்கு மிகுந்த பொறுப்பு உண்டு. தாயானவள் தகப்பனுக்குத் துணையானவள். தன் பிள்ளைகளை பெற்றெடுப்பது மாத்திரமல்ல, கற்றுத்தருவதும் அவர்தம் கடமையாகும். நான் முன்பு கோடிட்டுக் காட்டிய வசனத்தின் பிந்திய பகுதியைச் சற்று கவனிப்போம். மனோவாவும் அவன் மனைவியும் தாங்கள் கேட்டபோது தூதன் சொன்ன பதில் என் சிந்தையை வெகுவாய் பாதித்தது.

கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி, நான் ஸ்திரீயோடு சொன்ன யாவற்றிற்கும் அவள் எச்சரிக்கையாயிருந்து........ **நான் அவளுக்கு கட்டளையிட்டதெல்லாம் கைக்கொள்ளக்கடவள் என்றார் (நியா 13:13,14).**



மேற்கூறிய வசனத்தில் தாயும் தகப்பனும் ஜெபிக்கிறார்கள். ஆனால் பிள்ளையை வளர்க்க வேண்டிய பொறுப்பை தாயினிடத்திலே தேவதூதன் ஒப்புக்கொடுத்ததை கவனித்தீர்களா? எனவே பிள்ளைகளை செவ்வை வழியில் நடத்த மிகுந்த பொறுப்பு பெண்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டதை அறிந்து தாயாய் இருக்கிறவர்கள் கடமையை நிறைவேற்ற கருத்தாய் இருங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதும்போது, 'உனது மாயமற்ற விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்.'( II தீமோ 1:5) என்று குறிப்பிடுகிறார்.

தீமோத்தேயுவின் குடும்பத்தில் அவரது தகப்பனார் கிரேக்கர், தாயாரோ யூதஸ்திரீ. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த தீமோத்தேயு மிகச் சிறந்த ஊழியக்காரன் ஆனார். பவுலுடைய மிஷனரிப் பயணங்களில் உறுதுணையாய் இருந்தது மாத்திரமல்ல, கடைசிக் காலத்தில் எபேசுவில் கண்காணியாக (Bishop) பணியாற்றினார். இத்தகைய மாபெரும் உயர்வுக்குக் காரணம் யார் என்று பவுல் கோடிட்டுக் காட்டுபவர்களை கவனித்துப்பாருங்கள். தாயும் பாட்டியும் (இரண்டும் பெண்கள்) எனவே பிள்ளைகளின் முழுமையான நாற்பரிமாண வளர்ச்சிக்கு தாயே பொறுப்பானவள்.

யூதப் பெண்கள் கர்ப்பவதிகளாய் இருக்கும்போது கணவன், மனைவியின் வயிற்றின் மேல் கைகளை வைத்து, 'ஆண்டவரே இஸ்ரவேலை இரட்சிக்கும் மேசியா இவள் வயிற்றில் பிறக்கட்டும்' என்று ஜெபிப்பானாம். குழந்தை பிறந்த பிறகு தாயானவள் பிள்ளைக்குப் பாலூட்டும் போது பத்துக் கற்பனைகளை சொல்லிக்கொண்டே பாலூட்டுவாளாம். தன்னுடைய பாலின் மூலமாக தேவனுடைய பிரமாணம் உள்ளே செல்லும் என்பது அவள் எண்ணம் நீங்கள் அப்படியே உங்கள் பிள்ளைகள் மிகச் சிறந்த தேவமனிதராய் வரவேண்டுமென்றெண்ணி மிகுந்த எதிர்பார்ப்போடு கிரியை செய்யுங்கள்.

**வேத வசனத்தைக் கற்றுக்கொடுங்கள் :**

தகப்பன் ஸ்தானத்தில் இருப்பவர்களே உங்களுக்கு பிள்ளைகள் பிறவாததற்கு முன்பே நீங்கள் தேவனுக்கு முன் உண்மையுள்ள பொறுப்புள்ள தகப்பனாய் இருப்பீர்கள் என்று எண்ணியே உங்களிடத்தில் பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார். ஆதி 18 : 19இல் 'கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னதை நிறைவேற்றும்படியாய் **அவன் தன் பிள்ளைகளுக்கும் தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள்' என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.**

பார்த்தீர்களா! ஆபிரகாமைக் குறித்து எத்தனை அழகான சாட்சியை ஆண்டவர் கொடுக்கிறார்.



நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்கு தேவனுடைய பிரமாணத்தைக் கற்றுக் கொடுங்கள். கர்த்தருடைய வசனத்தைக் குறித்து அவர்களோடு கூட பேசுங்கள். அவர்களுடைய உள்ளத்தில் வேத வசனத்தை நீங்கள் விதையுங்கள்.

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். ஆபிரகாம் இப்படி பிரமாணங்களை போதித்தபடியினால் தான் அவன் குமாரனாகிய ஈசாக்கு நெறி தவறாதவனாக இருந்தான், தனது வாலிப நாட்களில் அவன் தியானம் செய்கிறவனாக இருந்தான் என்று வாசிக்கிறோம்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பிரமாணங்களை கொடுத்தபோது 'இன்று நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக் கடவது நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கும் போதும் வழியில் நடக்கிற போதும் படுத்துக் கொள்ளுகிறபோதும் எழுந்திருக்கும்போதும் அவைகளைக் குறித்து பேசு' என்று சொல்லியுள்ளார் (உபாகமம் 6 : 7, 8)

உட்காரும்போதும் நடக்கும்போதும் உங்கள் பிள்ளைகளிடத்தில் வேத வசனங்களை சமயம் வாய்த்தாலும் வாய்க்காமல் போனாலும் எடுத்துச் சொல்லுங்கள். அலிபாபாவும் நாற்பது திருடர்களும், அலாவுதீனும் அற்புத விளக்கும் கதைகளை உங்கள் பிள்ளைகளுக்கு சொல்லாதிருங்கள் சீர்கெடும் கட்டுக் கதைகளை கற்றுத் தராமல் விசுவாச விதைகளை

அவர்களுக்குள் விதையுங்கள் முன்னமே பிள்ளையாகிய தீமோத்தேயுவுக்கு பிரமாணங்களைக் கருத்தாய் சொன்னதினால்தான் அவன் பிரம்மாதமான ஊழியக்காரனாய் வந்தான்.

**சிட்சித்து வளருங்கள் :**

உங்களுக்கு வானளாவிய விசுவாசம் இருக்கட்டும் அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் பிள்ளை வளர்ப்பில் உங்கள் பிள்ளைகளின் பிழைகளை நீங்கள் தெளிவாக உணர்ந்திருந்தும் கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று வறட்டு விசுவாசத்திலும் குருட்டு நம்பிக்கையிலும் நெடுகப் போய் குழியில் விழுந்து விடாதீர்கள்.

உங்கள் பிள்ளைகளை நேசியுங்கள். ஆனால் அவர்கள் தவறு செய்யும்போது அவர்களை கண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் உங்கள் அன்பு ஒரு தடையாக இருக்கக் கூடாது. உள்ளபடியே உங்கள் பிள்ளையை நீங்கள் நேசிப்பீர்களாகில் உங்கள் பிள்ளையை நிச்சயமாய் நீங்கள் சிட்சிப்பீர்கள்.

ஏலியின் குடும்பத்தின் மேல் தேவனுடைய கடுங்கோபம் எழும்பியது. அதற்கு தேவன் இரண்டு விதமான காரணங்கள் காண்பிக்கிறார். முதலாவது ( I சாமு 2 : 29) 'என்னைப் பார்க்கிலும் அவன் தன் குமாரனை நேசிக்கிறான்' இரண்டாவதாக (I சாமு 3 :13) அவன் தன் குமாரர்களின் பாவங்களை அறிந்திருந்தும் அவன் அவர்களை அடக்காமற் போன பாவத்தினிமித்தம் நான் என் வழக்கைத் தொடுப்பேன்' என்று ஆண்டவரே சொல்கிறார். எனவே பெற்றோரே உங்கள் பிள்ளைகளின் பிழைகளை உரம் போட்டு



வளர்க்காதீர்கள். மாறாக பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான் என்று வேதம் சொல்கிறது.

பிள்ளைகளை சிட்சிப்பதிலும் ஒரு வரையரை உண்டு. வேதம் சொல்கிறது பிரம்பைக் கையாளுங்கள் என்று, அதை விடுத்து பிள்ளைகளை கண்டிக்கிறேன் என்று சொல்லி காட்டுமிராண்டித்தனமாக தாக்காதீர்கள், பிள்ளைகளை சிட்சிப்பது நல்லது ஆனால் அந்த சிட்சைகள் கர்த்தருக்கேற்ற சிட்சையாய் இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 6–ஆம் அதிகாரம் 4–ஆம் வசனத்தில் குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.

'பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக' அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அநாகரீகமான முறையில் கண்டித்து தண்டித்து கோபப்படுத்துவதால் அவர்கள் எதிர்கால சிந்தனைகளை எதிரிடையாய் மாற்றி விடுகின்றனர். 'நம்பிக்கையிருக்கு மட்டும் உன் மகனை சிட்சை செய். ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்பவொட்டாதே' என்று நீதிமொழிகள் 19 : 18ல் எழுதியிருக்கிறபடியால் ஞானமான முறையிலும் நாகரீகமான முறையிலும் உங்கள் பிள்ளைகளை கண்டியுங்கள்.

('பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்') அவன் மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான். உங்கள் பிள்ளைகளின் மேல் நீங்கள் அன்புகூறுகிறவர்களாய்

இருப்பீர்களாகில் ஆரம்பத்திலேயே அவர்களை கண்டிக்கவேண்டும் அப்படி செய்வீர்களாகில் பிரம்பைக் கையாள எந்தவிதமான அவசியம் இருக்காது.

உங்கள் பிள்ளைகள் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களை சீர்பொருந்தப் பண்ணுங்கள் (கலாத்தியர் 6 : 1 தழுவல்) உங்கள் பிள்ளைகளுடைய குற்றத்தை கண் காணாதவர் போல் இருந்து விடாதீர்கள். அவர்கள் மேல் உள்ள அன்பினால் அவர்களை கடிந்து கொள்ளத் தவறிவிடாதீர்கள்.

இராஜாவாகிய தாவீது தனது வாழ்க்கையில் மிகப்பெரிய தவறை தன்னுடைய பிள்ளையினுடைய காரியத்தில் செய்தான். I இராஜாக்கள் முதல் அதிகாரத்தை தெளிவாக வாசித்துப் பாருங்கள். விளக்கம் புரியும். தாவீதின் வயதான நாட்களில் அபிஷாகு என்னும் பெண்ணை மனைவியாகக் கொடுத்திருந்தனர். தாவீது மரித்துப் போனான். அப்பொழுது அரியணையில் சாலொமோன் அமர்ந்தான். அப்பொழுது தாவீதின் மகனாகிய அதோனியா சாலொமோனிடத்தில் ஒன்று அரியணையைத் தாரும் அல்லது அபிஷாகைத் தாரும் என்று கேட்டான். இந்த வார்த்தையினிமித்தம் சாலொமோன் பெனாயாவை அனுப்பி அதோனியாவைக் கொன்று போட்டான்.

பார்த்தீர்களா! அதோனியா சிற்றன்னையை கேட்கும் அளவிற்கு சீர்கெட்டுப் போனதற்கு காரணம் உங்களுக்கு தெரியுமா? வேதம் சொல்லுகிறதைக்



கவனியுங்கள் 'அவனுடைய தகப்பன் நீ இப்படி செய்வானேன் என்று அவனை ஒருக்காலும் கடிந்து கொள்ளவில்லை, அவன் மிகவும் அழகுள்ளவ னாயிருந்தான். அப்சலோமுக்குப் பின் அவனுடைய தாய் அவனைப் பெற்றாள்'' (I இராஜா 1 : 6)

ஆரம்ப காலத்திலிருந்தே தாவீது அவனைக் கடிந்து கொள்ளவில்லை. அதுவே அதோனியாவின் சீரழிவுக் காரணம் தாவீது அதோனியாவைக் கண்டிக்காததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று அவன் அழகுள்ளவன். இரண்டு அவன் அப்சலோமுக்குப் பின் பிறந்தவன். அப்சலோம் மரித்ததினால் அவனிடத்திலிருந்த அன்பை அதோனியா பக்கம் தகப்பன் திருப்பிவிட்டார். அவன் அழகாயிருந்ததினால் இவன் அதிக அன்பை செலுத்தி அவனைக் கண்டிக்காமல் விட்டுவிட்டான்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளிடத்தில் கவனமாய் இருங்கள். என் மகன் என் அப்பாவைப் போல் இருக்கிறான். என் மகள் என் அம்மாவைப் போல் இருக்கிறாள் என்று இறந்தவர்களின் நினைவாக உங்கள் பிள்ளைகளை விக்கிரகமாக்கி விடாதீர்கள். இப்படி செய்வீர்களானால் உங்கள் குடும்பத்தில் நீங்கள் அதோனியாவை உற்பத்தி செய்வீர்கள் எனவே உங்கள் பிள்ளைகளை கண்டித்து தண்டித்து கர்த்தருக்குள் வளருங்கள்.

## குடும்பப் பொறுப்பை ஊட்டுங்கள் :

உங்கள் பிள்ளைகளுக்கு உங்கள் குடும்பத்தில் இளம் வயதிலேயே பொறுப்புக் கொடுங்கள். நமது குடும்பத்தின் நிலை, சூழ்நிலை, பொருளாதாரநிலை,

பணக்கஷ்டம் ஆகியவை உங்கள் பிள்ளைகளுக்கு சரியாய் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். கூடுமானால் எவ்வளவு சீக்கிரம் உங்கள் வீட்டு வேலைகளில் அவர்களை ஈடுபடுத்த முடியுமோ, அவைகளில் அவர்களை ஈடுபடுத்துங்கள். எனக்கு ஒரே ஒரு மகன், ஒரே ஒரு மகள் இவர்களை செல்லமாக வளர்ப்பேன், என்று குடும்ப சூழ்நிலை தெரியாமல் அவர்களை வளர்ப்பீரானால் எதிர்காலத்தில் அவர்களுடைய சுமை உங்களுக்குப் பெரியதாய் இருக்கும்.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனா யிருந்தும் தச்சனுடைய குடும்பத்தில் பிறந்த படியினால் அவர் அந்த தொழில் செய்தார். அவருக்குப் பின் பல சகோதர சகோதரிகள் அவருடைய குடும்பத்திலிருந்தனர். இயேசுவோ தேவனுடைய குமாரனாயிருந்தும் தனது பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்திருந்தார் என்று லூக்கா 2 : 51–ல் வாசிக்கிறோம்.

அவர் கீழ்ப்படிதலை எப்படி கற்றுக் கொண்டார் தெரியுமா? ‘அவர் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்’ என்று எபிரெயர் 5 : 8 சொல்கிறது. ஆம் கிறிஸ்துவானவர் தமது இளம் பிராயத்திலேயே குடும்பத்தில் பாடுகளை அனுபவித்தார். அதினிமித்தம் அவர் பிதாவுக்கு கீழ்ப்படிந்திருந்தபடியினால்தான் பரம பிதாவினுடைய சித்தத்தை பூரணமாக நிறைவேற்ற அவரால் முடிந்தது.

உங்கள் பிள்ளைகளுக்கு எதை செய்தாலும் எதை சொன்னாலும் கிறிஸ்துவை முன்வைத்து



அவர்களோடு பேசுங்கள். மத்தேயு 6 : 33–இல், ‘முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்ற வார்த்தையின்படி உங்கள் பிள்ளைகள் தங்களுடைய உலகப் பிரகாரமான தேவைகளுக்கு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கச் செய்யுங்கள். உங்களால் அவர்கள் தேவையை சந்திக்கக் கூடுமென்றாலும் அவர்கள் நம்பிக்கை உங்கள் மேல் பற்றாதபடி கிறிஸ்துவின் மேல் பற்றுதல் உண்டாகும்படி, கர்த்தர் தருவார், ஜெபியுங்கள் என்று சொல்லி அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

என் பிள்ளைகள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் சரி இயேசப்பா தருவார் ஜெபம் பண்ணலாம் என்று சொல்லி அவர்களை ஜெபிக்கச் செய்வேன். அடுத்த நாள் அந்தப் பொருட்களை நானே வாங்கிக் கொண்டு வருவேன். அதைப் பார்த்து என் பிள்ளைகள் அப்பா இது ஏது? என கேட்பார்கள். நேற்று நீங்கள் இதற்காக ஜெபித்தீர்கள் அல்லவா? அதை வாங்க இயேசப்பா பணம் அனுப்பியிருந்தார். அதிலே வாங்கி வந்தேன் என்பேன். இப்பொழுதெல்லாம் என் பிள்ளைகள் என்னிடத்தில் கேட்பதை பார்க்கிலும் நேரடியாக ஜெபத்தில் இறங்கி விடுகிறார்கள்.

ஆபிரகாமும் அவன் குமாரனும் பலி செலுத்த மோரியா நோக்கிச் செல்லும்போது நெருப்பு உண்டு விறகு உண்டு ஆடு எங்கே? என்று ஈசாக்கு கேட்டபோது கிஞ்சிற்றும் அஞ்சாமல் கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்றான். அதனால் தான் ஈசாக்கும்

கவலைப்படாமல் தகப்பனுடைய வாய்மொழி மேல் விசுவாசம் வைத்து அவன் கட்டப்பட்ட போதும், கட்டையின் மேல் கிடத்தப் பட்ட போதும் கலங்காதவனாயிருந்தான். முடிவில் ஆட்டுக்குட்டியையும் பெற்றுக் கொண்டான். உங்கள் பிள்ளைகளுக்கும் இப்படியே போதியுங்கள்.

**கீழ்ப்படியக் கற்றுக்கொடுங்கள் :**

உங்கள் பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதலைக் கற்றுக் கொடுங்கள். அந்தப்படி இளைஞரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள் என்று பேதுரு தமது முதலாம் நிருபம் 5 : 5–ல் குறிப்பிடுகிறார். சபையிலிருக்கிற அதிகார நிலையில் உள்ளவர்களுக்கு உங்கள் பிள்ளைகள் கீழ்ப்படிய அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படியக்கடவன் என்று ரோமர் 13 : 1–இல் பவுல் குறிப்பிடுகிறார். அவர் தம் கல்வி நிலையங்கள் ஆவிக்குரிய சபை மற்றும் சொந்த வீடு ஆகியவற்றில் மேலான அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிய அவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள்.

உங்கள் பிள்ளைகளை உட்கார வைத்துக் கொண்டு மற்றவர்களைக் குறித்து தீதானவைகளைப் பேசாதிருங்கள். மற்றவர்கள் குறைகளை விமர்சனம் செய்யாதிருங்கள். போதகர் அப்படி, போதகரம்மா அப்படி, மூப்பர் இப்படி என்று மூத்தோர்களைக் குறித்து விமர்சனம் செய்யாதிருங்கள்.

உங்கள் போதகரைக் குறித்து நீங்களே குறைவு பேசுவதினால்தான் உங்கள் வார்த்தைக்கும் உங்கள்



பிள்ளைகள் கீழ்ப்படிவதில்லை. உங்கள் போதகரின் வார்த்தைக்கும் கீழ்ப்படிவதில்லை. II தீமோ 3 : 2 இல் கடைசி நாட்களில் தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும் பரிசுத்தமில்லாதவர்களாயும் இருப்பார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. எனவே இக்காலத்துப் பிள்ளைகள் எளிதில் எவருக்கும் கீழ்ப்படியமாட்டார்கள். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் கருத்தாய் போதித்து மற்றவர்களுக்கு கீழ்ப்படியக் கற்றுக் கொடுங்கள்.

உங்கள் பிள்ளைகள் மற்றவர்களுக்கு புனைப் பெயர் வைத்து பேசும் போது அவர்களை உற்சாகப்படுத்தாதிருங்கள். மற்றவர்கள் போல் அபிநயம் செய்து காட்டும் போது ஆதரிக்காதீர்கள். அப்படி செய்வதினால் அவர்களை அறியாமலேயே ஆசீர்வாதங்களை இழந்து போகின்றனர். ஆகார் பெற்ற இஸ்மவேல், சாராள் பெற்ற ஈசாக்கை பரியாசம் செய்ததினால் பரிதாபமாக துரத்தப் பட்டான். உங்கள் பிள்ளைகளுடைய ஆசீர்வாதத்திற்கு நீங்கள் காப்பாளராக இருக்கும் பொருட்டு அவர்களை நீங்கள் கருத்தாய்க் கண்டியுங்கள்.

II இராஜாக்கள் 2–ஆம் அதிகாரம் 23, 24–ஆம் வசனங்களில் எலிசா தீர்க்கதரிசி இரட்டத்தனையாய் வல்லமை பெற்று திரும்பி வரும்போது பெத்தேலிலுள்ள பிள்ளைகள் ‘‘மொட்டைத் தலையா ஏறிப்போ! மொட்டைத் தலையா ஏறிப்போ!’’ என்று அவனைக் கேலி செய்ததினால் அவர்களை எலிசா சபித்தான். அதினால் 42 பிள்ளைகள் இரண்டு கரடிகளால் பீறிப்போடப்பட்டனர். கவனமாயிருங்கள்.

குட்டையா, நெட்டையா, சொட்டையா என்று எந்த ஒரு ஊழியக்காரரையும் உங்கள் பிள்ளைகள் சொல்வதைக் கேட்டு நீங்கள் சும்மாயிருந்து விடாதீர்கள். அவர்கள் முடிவு பரிதாபமாகும்.

**கடமையை செய்யுங்கள் :**

உங்கள் பிள்ளைகளை சரீரப்பிரகாரமாகவும் மாத்திரமல்ல, அவர்கள் வளர்ந்து வரும்போது அவர்களுக்குண்டான கடமையை நேரத்தே செய்யுங்கள். அப்படி உங்கள் கடமையை நீங்கள் நிறைவேற்றத் தவறினால் நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களே செய்து கொள்ளும் போது நீங்கள் கலங்கி நிற்க நேரிடும். உங்களைக் கரைச் சேர்க்க யாராலுமே முடியாது.

உங்கள் பிள்ளைகளுக்கு சோறு போட்டு வளர்த்து உங்களால் ஆனமட்டும் படிக்க வைப்பது முக்கியமல்ல, அவர்கள் சரீரப்பிரகாரமான தேவைக் கென கொஞ்சம் பொருளையோ பணத்தையோ சேமித்து வையுங்கள் நான் இப்படி எழுதுவது ஆவிக் குரியவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு விசித்திரமாக இருக்கும். ஆகிலும் நான் எழுதியுள்ள படி செய்யாதவர்களுக்கு விசும்பல் நிறைந்திருக்கும் என்பதை தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சேமிப்பா? வேதத்தில் எங்கே இருக்கிறது என்று கேட்டு விடாதீர்கள். அப்போஸ்தலானகிய பவுல் II கொரி 12 : 14, இல், ‘‘பெற்றோருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும்’ என்று மிகத் தெளிவாக எழுதி வைத்திருக்கிறார்.



நீதிமொழிகள் 19 : 14–இல் ‘‘வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்திரம்’’ என்று ஞானி தெளிவாக எழுதிவைத்திருக்கிறார். பெண் பிள்ளைகள் வைத்திருக்கிற சிலர் அவளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று தெளிவாக அறிந்திருந்தும் பத்து பைசா கூட கையிலில்லாமல் பத்திரிகை அடித்து விட்டு கடைசி நிமிடத்தில் நாற்பது இடங்களுக்கு நாயாய் அலைவதைப் பார்த்து நகைப்பதா அவர்களைப் பகைப்பதா என்று திகைத்தது உண்டு. தமிழகத்தில் ஒரு முன்னோடியான பிரசங்கியார், ‘‘கிறிஸ்தவர்களுக்கு பக்தி இருக்கிறது புத்தி இல்லை’’ என்பார். இன்றைக்கு கிறிஸ்தவ உலகம் அப்படித்தான் இருக்கிறது.

இயேசு சொன்னது போல புறாவைப் போல கபடற்றவர்களாயும் சர்ப்பத்தைப்போல வினா உள்ளவர்களாயும் நடந்து கொண்டு சற்று சேர்த்து வைப்போம். இதில் தவறில்லை. இயேசுகிறிஸ்து வனாந்தரத்தில் 5அப்பம் 2 மீனைக் கொண்டு 5000 பேரை போஷித்தது ஒரு அற்புதந்தான். ஆனால் அதனைத் தொடர்ந்து அவர் சொன்ன வார்த்தைதான் மிக முக்கியம். ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளை சேர்த்து வையுங்கள். அந்தப்படியே சீஷர்கள் 12 கூடையில் அவைகளை சேர்த்தார்கள். (யோவான் 6 : 12, 13). எனவே உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு அவர்கள் மகிழ்ச்சியாய் இருக்கும் பொருட்டு உங்களால் இயன்றதை சேர்த்து வையுங்கள் (கடனை சேர்த்து வைக்காதிருங்கள்).

வளர்ந்த பிள்ளைகளை வைத்துள்ள

பெற்றோர்களே அவர்களுக்கு ஏற்ற வேளையில் விவாகம் செய்து வையுங்கள். அது உங்கள் கடமை ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கு வளர்ந்த போது அவனுக்கு விவாகம் செய்ய சிந்தனைகொண்டு பெண் தேடி எடுத்து தன் கடமையை நிறைவேற்றினான். ஆனால் கிறிஸ்தவப் பெற்றோர்கள் ஏனோ இதில் தவறி விடுகிறார்கள்.

மனிதன் தனிமையாயிருப்பது நல்லது அல்ல என்று ஆதித் தகப்பனுடைய அநாதித் தகப்பன் அறிந்து திருமணத்தை நடத்தி வைத்தார். ஆகவே அரசு நிர்ணயித்துள்ள திருமண வயதை அவர்கள் எட்டினவுடன் நீங்கள் ஜெபிக்கவும் செயல்படவும் வேண்டும். அப்படி நீங்கள் செயல்படத் தவறும் பட்சத்தில் அவர்கள் செயல்படத் தொடங்கி விடுவார்கள். நீங்கள் செயலிழந்து போவீர்கள்.

ஒருமுறை ஒரு கிறிஸ்தவப் பெற்றோர்கள் என்னிடத்தில் வந்து ஒப்பாரி வைத்து அழுதார்கள் அவர்கள் அழுது முடித்த உடன் ஆறுதலாய் சங்கதி என்னவென்று கேட்டேன். ‘பாஸ்டர், வேலைக்குப் போன மகள் திரும்பி வரவில்லை விவாகமாகி விட்டதாம். எங்கள் குடும்ப கௌரவம் காற்றில் பறக்கிறதே’ என்று கதறினார்கள்.

இவர்களுடைய கலக்கத்தை முன்னிட்டு அந்தப் பெண் இருக்கும் இடம் தேடி சென்று விசாரித்தேன். அந்தப் பெண், ‘பாஸ்டர் நான் 20–ம் வயதில் வேலைக்குப் போனேன், 10 வருஷம் சம்பாதித்துப் போட்டேன். என் சம்பளம் எவ்வளவு என்று கணக்குப் பார்த்தார்களே தவிர என் வயசு என்னவென்று



கணக்குப் பார்க்கத் தவறிவிட்டார்கள். ஆகவே இவர்களை நம்பி ஒரு பயனும் இல்லையென்று நானே இந்த முடிவுக்கு வந்துவிட்டேன்’ என்று முகத்தில் அறைந்தாற் போல் சொன்னாள். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளை நொந்து கொள்வதா? அவளைப் பெற்றவர்களை நொந்து கொள்வதா?

ஆகையால் பெற்றோர்களே, நீங்கள் இந்தக் காரியத்தில் விவேகமுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும் திருமணத்தில் சம்மந்தம் பார்ப்பதில்கூட சில காரியங்களை கவனிக்க வேண்டும். முதலாவது ஜெபிக்க வேண்டும். அடுத்து ஆவிக்குரியவர்களின் ஆலோசனையையும் உதவியையும் நாட வேண்டும். அதற்கடுத்தாற்போல் விவாகத்துக்குக் காத்திருக்கிற உங்கள் பிள்ளைகளிடத்தில் நீங்கள் பேசி அவர்கள் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டும்.

அதை விடுத்து என் மகன் (அ)மகள் நாங்கள் யாரைச் சொல்கிறோமோ அவர்களை கட்டிக் கொள்வார்கள் என்று அசட்டு நம்பிக்கை வைத்துக்கொண்டு பணத்தையும் பகட்டையும் பார்த்து ஏட்டிக்குப் போட்டியாக கட்டி வைப்பதினால்தான் போன பஸ்ஸிலேயே திரும்பி வந்து பிரிந்து வாழ்கின்றனர்.

உங்களுக்கு இதைப் படிப்பதற்கு வித்தியாச மாகத் தெரியலாம். வேறு புத்தகத்தின் பக்கம் ஏதாகிலும் மாறி இதற்குள் வந்து விட்டதா என்று உங்களுக்கு ஐயப்பாடு ஏற்படலாம். இல்லவே இல்லை. கிறிஸ்தவ உலகம் சிந்திக்க வேண்டிய சீர்துாக்கிப்

பார்க்க வேண்டிய காரியத்தை மறந்து மந்தமாக இருப்பதினால் சிரமம் பாராமல் சில வரிகளை எழுதி விட்டேன்.

உங்கள் பிள்ளைகளை கலந்து ஆலோசிப்பதில் எந்த விதத் தவறும் இல்லை. அவர்கள் உள்ளத்தில் என்னதான் இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளாமல் போனால் அவர்களுக்கு நல்ல விஷயமாக இருக்க வேண்டிய இது நல்ல விஷமாகத்தான் இருக்கும். எலியேசர் பெண் கேட்க பெத்துவேல் வீட்டிற்குப் போனபோது விவாகக் காரியங்களின் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. அப்பொழுது பெண் வீட்டார் என்ன சொன்னார்கள் தெரியுமா, 'அப்பொழுது அவர்கள் பெண்ணை அழைத்து அவள் வாய்ப் பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி... கேட்டார்கள். அவள் போகிறேன் என்றாள்' (ஆதி 24 : 57, 58). ஈண்டு லாபானுக்கும் அவன் தகப்பனுக்கும் இது தேவ சித்தம் என்று தெரிந்தாலும் (ஆதி 24 : 50) பெண்ணின் வாய்மொழியைக் கேட்டதினால் அந்தத் தம்பதிகள் சாகும் வரை சந்தோஷமாக இருந்தார்கள்.

உறவும் சொத்தும் நம்மை விட்டுப் பிரிந்து விடக்கூடாது என்பதினால் தேவ சித்தத்தை அறியாமல் உங்கள் பிள்ளைகளுக்கு சம்மந்தம் பார்த்து விடாதீர்கள் அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாதிருப்பீர்களாக, விவாகத்திற்காக அண்ணன் மகனையும் தங்கை மகளையும் கிறிஸ்துவுக்குள்ளாக்கி ஞானஸ்நானம் கொடுத்து திருமணம் செய்து வைத்த குடும்பங்களில் புயலும்



சூறாவளியும், யுத்தமும் சத்தமும் ஓயாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதை உங்கள் கவனத்தில் வையுங்கள்.

ஆபிரகாம் தனது வீட்டாரிடத்திற்கு (வீடு என்பது சொந்த ஜாதியை அல்ல ஆவிக்குரிய வீட்டாரைக் குறிக்கிறது) எலியேசரை அனுப்பி பெண் கொண்டது போல் ஆவிக்குரிய இடங்களில் சம்மந்தம் கலக்க வேண்டும் திருமணமான பிறகு சரியாகி விடும் என்று எண்ணி அவிசுவாசிகளோடு இணையாதீர்கள். மாட்டையும் கழுதையையும் ஒரே ஏரில் கட்டாதிருப்பாயாக என்று பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதை சிந்தையில் வைத்து செயல்படுங்கள்.

## பிள்ளைகளின் அன்புக்கு பாத்திரமாய் நடந்து கொள்ளுங்கள் :

ஒருமுறை ஒரு சிறுவர் வேதப்பள்ளியில் (Sunday school) ஆசிரியை பிள்ளைகளுக்கு ஆண்டவரைப் பற்றி சொல்லிக் கொண்டு இருந்தார்கள். ''ஆண்டவர் நமக்கு அப்பா போன்றவர், அவரை எத்தனை பேர் அன்பு கூறுகிறீர்கள்'' என்று ஆசிரியை கேட்ட போது ஒரு குறிப்பிட்ட பெண்ணைத் தவிர மற்ற எல்லா பிள்ளைகளும் கையை உயர்த்தினர்.

ஆசிரியை கையை உயர்த்தாத அப்பெண்ணை அழைத்து ''ஆண்டவர் 'அப்பா' போன்றவர்'' என்று மீண்டும் சொன்ன போது ''அய்யோ! எங்கப்பா தினமும் குடித்துவிட்டு அடிப்பார் உதைப்பார் ஆண்டவரும் 'எங்கப்பா' போல் என்ற உடன் எனக்கு பயமாக இருக்கிறது'' என்று கண்ணீர் விட்டாளாம்.

உங்கள் பிள்ளைகள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள். என் தகப்பனார் என்மேல் அக்கறையும் அன்பும் உள்ளவர் என்ற எண்ணம் உங்கள் பிள்ளைகள் மனதில் ஊன்றச் செய்யுங்கள்.

ஆகவே பெற்றோரே

பிள்ளைகளுக்கு மாதிரியாயிருங்கள்

வேத வசனத்தைக் கற்றுக் கொடுங்கள்

குடும்பப் பொறுப்பை ஊட்டுங்கள்

கீழ்ப்படியக் கற்றுக்கொடுங்கள்

கடமையைச் செய்யுங்கள்.

இப்படி செய்தால் பிள்ளைகளின் அன்புக்குப் பாத்திரமாய் இருப்பீர்கள். உங்கள் சந்ததி பரிசுத்த சந்ததியாய்த் திகழும். கர்த்தர் மகிமைப்படுவார்.



# 3

## புருஷர்களே !

தேவனுடைய சிருஷ்டிப்பில் உன்னதமான படைப்பு மனுஷர்கள். பறவைகளையும் மச்சங்களையும் மிருகங்களையும் ஜாதி ஜாதியாகவும் திரளாகவும் சிருஷ்டித்தார். ஆகிலும் மனிதனை ஒருவனாக உண்டாக்கினார். அந்த ஒருவனைக் குறித்து வேதம் சொல்லும்போது 'ஆணும் பெண்ணுமாக' சிருஷ்டித்தார் என்று குறிப்பிடுகிறது. இந்த இரகசியம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

ஆதாமிலிருந்து ஏவாளை பிரிப்பதற்கு முன்பு ஆதாமுக்குள் ஆண்மையையும் பெண்மையும் இணைந்தே இருந்தது. அதைப்போலவே ஆணிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஏவாள் ஆண்மைக்குரிய அம்சங்கள் பெற்றவளாகவும் இருந்தாள்.

இன்றைய மருத்துவ ஆய்வுகள் இஃதினை 100% உறுதிப்படுத்துகின்றன. எல்லா ஆண்களுக்குள்ளும் குறைந்த குறிப்பிட்ட சதவிகிதம் பெண்மை இருக்கிறது. அதனால் ஆண்களாயிருந்தும் அழுகிறார்கள். சில சமயம் வெட்கப்படுகிறார்கள் (சமைக்கிறார்கள் என்று சேர்த்துக் கொள்ளாதீர்கள்)

அப்படியே பெண்களுக்குள்ளும் குறைந்தளவு குறிப்பிட்ட சதவிகிதம் ஆண்மை இருக்கிறது அதனால் தான் கோபம், பளுதூக்குதல் போன்றவற்றில் முந்திக் கொள்கிறார்கள். (இவள் ஆணாக பிறக்க வேண்டியவள் என்று சொல்கிறோமே) இந்த அடிப்படை அறிவியல் உண்மை ஆதாம் ஏவாள் ஒன்றித்தே இருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறதல்லவா?

தேவன் இந்த உலகத்தை தமக்காக உண்டாக்கினார். எல்லாம் அவருடையதாயிருந்தது. ஆதாமுக்கோ தனக்கென உரிமை பாராட்ட ஒன்றுமில்லை. எனவே தேவன் ஆதாமின் எலும்பை எடுத்து ஏவாளை உருவாக்கி ஏவாளை ஆதாமின் உடைமையாக்கினார்.

எனவே குடும்பம் என்றால் என்ன? என்பதை நாம் சரியாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பாகவே தேவன் திருமணத்தை நடத்தி வைத்தார். திருமணத்தை தேவன் சிநேகிக்கும் பரிசுத்தம் என்று மல்கியா 2 : 15 குறிப்பிடுகிறது. விவாகம் கனமுள்ளது என்று எபிரெ. 13 : 4 குறிப்பிடுகிறது.

கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவை பூலோகத்தில் அடையாளமாகக் காட்டுவது புருஷன் மனைவி உறவு. ஆகையால் புருஷர்கள் தங்கள் மனைவியை கிறிஸ்துவைப் போல சகல நடக்கையிலும் நடத்த வேண்டும்.

**மனைவியில் அன்புகூறுங்கள் :**

கிறிஸ்து சபையை அன்புகூறுவதுபோல புருஷனானவன் மனைவியில் அன்புகூற வேண்டுமென்று எபேசியர் 5 : 25 கூறுகிறது. மனைவி யார் என்பதைக் குறித்து தெளிவான அறிவு புருஷர்களுக்கு இருக்க வேண்டும்.



வெளியூரிலிருந்த ஒரு வாலிபன் தன் தாய்க்கு ஒரு கடிதம் எழுதினான் ‘அம்மா நான் தனியாய் இருக்கிறேன் துணி துவைக்க முடியவில்லை. வாஷிங் மெஷின் (Washing machine) வாங்கி அனுப்புங்கள்’ என்று எழுதினானாம். அடுத்த மாதம் ‘அம்மா சமைக்க முடிவதில்லை ஒரு குக்கிங் மெஷின் (Cooking machine) வாங்கி அனுப்புங்கள்’ என்று எழுதினானாம். அடுத்த மாதம் ‘அம்மா வீடு சுத்தம் செய்ய முடியவில்லை, ஒரு கிளீனிங் மெஷின் (Cleaning machine) வாங்கி அனுப்புங்கள்’ என்று எழுதினானாம்.

அம்மாவுக்கு அர்த்தம் புரிந்து விட்டது. மௌனம் கலைந்தது. உடனடியாக ஒரு பெண்ணைப் பார்த்து பையனுக்கு கல்யாணம் செய்து வைத்து விட்டார்கள். நான் இதைக் குறிப்பிடக் காரணம் அநேக புருஷர்களுக்கு மனைவி என்பவள் துவைக்க, சமைக்க, உழைக்க வந்த சம்பளமில்லாத வேலைக்காரி என்றும், சளைக்காமல் உதவும் மெஷின் என்றும் நம்புகிறார்கள்.

புருஷர்களே! உங்கள் மனைவி உங்கள் சரீரம், உங்கள் வாழ்வை வளமாக்க, உங்கள் உள்ள பாரங்களை பகிர்ந்து கொள்ள, உங்கள் வாழ்வில் பின்னனியிலிருந்து உங்களை முன்னுக்குத் தள்ள உள்ளன்போடு கூடிய உணர்ச்சியுள்ள உண்மை சொரூபம் தான் உங்கள் மனைவி என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவைப் போல் அன்புகூற வேண்டும். அப்படி அன்பு கூராமற்போனால் கிறிஸ்துவின் நாளில் நீங்கள் கிறிஸ்துவைப் போல மாற முடியாது. எச்சரிக்கையாயிருங்கள். இவள் வந்து வாய்த்தாளே! என்று சலித்துக் கொள்ளாதீர்கள் ‘ஏற்ற துணை’யை உண்டாக்குவேன் என்று வாக்கு செய்த தேவனே

உங்களுக்கு மனைவியைத் தந்துள்ளார். உங்கள் மனைவியை சலித்துக் கொள்வது உங்கள் மாமனாரையல்ல, உங்களுக்கு மனைவியை கொடுத்த தேவனானவருக்கு எதிராக முறுமுறுப்பை உண்டாக்குகிறீர்கள் கவனமாயிருங்கள்.

உங்கள் மனைவி உங்களுடைய அடிமையல்ல I பேதுரு 3 : 7–இல் உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக் கொள்கிறவர்கள் என்று குறிப்பிடுகிறது. உங்களைப் போலவே உங்கள் மனைவியை தேவன் அழைத்து அபிஷேகம் பண்ணி அவர்களுக்குள் தங்கியிருக்கிறார். அவர்கள் பரலோகத்தில் உங்கள் மனைவியாய் அல்ல, உங்களைப் போலவே தேவனுக்கு மணவாட்டியாய் இருக்கப் போகிறார்கள். ஆகவே உங்கள் மனைவியை உங்களுக்கு சமமானவர்களாகக் கருதுங்கள். மல்கியா 2 : 14–இல் மனைவியை உடன்படிக்கையின் தோழி என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையைக் கண்டடைகிறான் கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான். (நீதி 18 : 22). எனவே உங்கள் மனைவி கர்த்தரால் உங்களுக்கு அருளப்பட்ட தயை, நன்மை என்பதை சிந்தையில் வையுங்கள்.

உங்கள் மனைவி உங்கள் சொந்த சரீரமாய் இருக்கிறதினால் நீங்கள் போடும் சோறையல்ல. நீங்கள் எடுத்துத் தரும் நாகரீக உடையையல்ல. நீங்கள் அன்பான வார்த்தை பேசி உண்மையான நேசத்தைப் பொழிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த அன்பின் எதிர்பார்ப்பில் தான் குடும்பத்தில் ஏற்படும் அத்தனை சுமைகளையும் சாதாரணமாக ஏற்றுக் கொண்டு அசாதாரணமான ஈடுகொடுக்கிறாள்.



தேவனுடைய சிருஷ்டிப்பைப் பாருங்கள் சிறந்த பண்டிதர் ஒருவர் இப்படி சொல்லுகிறார். எலும்பை புருஷனுடைய காலிலிருந்து எடுக்கவில்லை. அப்படி செய்திருந்தால் புருஷன் மனைவியை காலின் கீழ் போட்டு மிதிப்பான். அப்படியே தலையிலும் எடுக்கவில்லை. அப்படி எடுத்திருந்தால் மனைவி, புருஷன் தலைமேல் ஏறி உட்கார்ந்து விடுவாள். ஆனால் தேவன் விலாவிலிருந்து எடுத்தார்.

அர்த்தம் என்ன தெரியுமா? எலும்பு இருதயத் திற்கு பக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட படியினால் அவள் அன்புக்குரியவள். புயங்களுக்குக் கீழ் இருந்து எடுக்கப்பட்ட படியினால் அரவணைப்புக்குரியவள். எனவே அன்பையும் அரவணைப்பையும் உங்கள் மனைவிக்கு சொந்தமாக்குங்கள்.

### போஷித்துக் காப்பாற்றுங்கள் :

கிறிஸ்து சபையை போஷிப்பது போல புருஷனானவன் மனைவியை போஷித்துக் காப்பாற்ற வேண்டும் (எபேசி 5 : 29) என்று வேதம் சொல்லுகிறது உங்கள் மனைவி வேலை செய்கிறவரா செய்யாதவரா? என்பது பிரச்சனையல்ல புருஷனே மனைவியை போஷிக்க வேண்டும் என்பது வேதம் சொல்லுகிற பிரமாணம். இதை மறந்து விடாதீர்கள்.

அநேக குடும்பத்தில் இங்கேதான் பிரச்சனை ஆரம்பிக்கிறது. வேலைக்கு செல்லாத மனைவியரை புருஷர்கள் ஏளனமாகப் பேசுவதும், உனக்கு தண்டச்சோறு போடுகிறேன் என்றும் நாக்கூசாமல் மனைவியை பேசுவது கிறிஸ்தவக் குடும்பங்களில் மலிந்து விட்டது. அப்படி சொல்ல உங்களுக்கு அதிகாரமில்லை. அப்படி சொல்வீர்களானால் நீங்கள் குடும்பத் தலைவன் என்று சொல்ல லாயக்கில்லை.

உங்கள் திருமணத்தின்போது உங்கள் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு 'உன்னை போஷித்துக் காப்பாற்றுவேன்' என்று வாக்குக் கொடுத்தீர்களே அது உண்மையாகவே சொன்னீர்களா? அல்லது பரிசுத்தவான்களின் முன்னிலையிலும் பரிசுத்த ஆவியானவர் சமூகத்திலும் கபடாய் சொன்னீர்களா? மனைவிகள் வேலைக்கு சென்றால் அது சந்தோஷமே. அதுவும் ஆசீர்வாதமே. உங்கள் மனைவி வேலைக்கு செல்லாவிட்டாலும் அதுவும் சந்தோஷமும் ஆசீர்வாதமுமே. வேலைக்கு செல்லாத மனைவி கூடுதல் பாரத்தை நாள் முழுதும் சுமக்கிறாள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். எனவே உங்கள் மனைவியை போஷித்து அவர்கள் தேவைகளை அவ்வப்போது சந்தித்து அவர்களை மகிழ்ச்சியாக வைப்பது உங்கள் கடமை.

நீங்கள் உங்கள் மனைவியைப் போஷிப்பதை பெரிதாக மேன்மை பாராட்டி அவர்களை குற்றப்படுத்தும் படி பேசினது உண்டானால் அன்புகூர்ந்து உங்கள் மனைவியிடம் வருத்தம் தெரிவித்து இன்று முதல் கூடுதல் அன்பையும் கனத்தையும் செலுத்துங்கள்.

உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பணிவிடை செய்து, துணி துவைத்து இவ்வளவு நாள் தாங்கி வந்ததற்கு சம்பளம் கணக்கிட்டுப் பார்த்து நீங்கள் போட்ட சாப்பாட்டுக் கணக்கை கழித்துப் பார்த்தால் நீங்கள் தான் உங்கள் மனைவிக்கு பல ஆயிரங்கள் கணக்கிட்டு பாக்கித்தர வேண்டும். எனவே தன்னலமற்ற தியாகியாய் தன்னையே அழித்துக் கொள்ளும் உங்கள் மனைவியை மகிழ்ச்சியோடு போஷியுங்கள்.



**மனைவியைக் கனம் பண்ணுங்கள் :**

கர்த்தர் ஈவாகத் தந்த மனைவியை கனம் பண்ண வேண்டுமென்று பெரிய அப்போஸ்தலனாகிய பேதுரு தனது முதலாம் நிருபத்தில் 3 : 7 இல் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியரில் மனைவியை சொந்த மாம்சம் என்று குறிப்பிடுகிறார். ஆகவே உங்கள் மனைவியைக் கனம் பண்ணுங்கள்.

உங்கள் மனைவியை அழைப்பதில் கனத்தைக் கொடுங்கள் அடுத்தவர்களிடத்தில் அறிமுகம் செய்யும் போதும் அவர்களை கனத்துக்குரியவர்களாக அறிமுகம் செய்யுங்கள். மேலை நாட்டார் தங்கள் மனைவியை டார்லிங் (Darling) தேனே (Honey) என்று அன்பொழுக அழைக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் தேளே, சனியே என்று அவலட்சணமாய் அழைக்கிறார்கள்.

உங்கள் மனைவி உங்களில் அன்புகூற வேண்டுமானால் அவர்களை அன்பொழுக அழையுங்கள். திருமறைப் பெரியார் யோபு ஞானப்பிரகாசம் ஐயா அவர்கள் திருமண ஆராதனைகளில் சொல்லும் உதாரணங்கள் மிகுந்த சிந்தனைக்குரியவைகள்.

ஒருநாள் ஒருவன் தன் சிநேகிதனை தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்திருந்தான். மனைவியை ஒவ்வொரு முறை கூப்பிடும் போதும் ஏ! கழுதை ஏ! கழுதை என்று கூப்பிடுவானாம். வந்த விருந்தினர் இதை கவனித்துக் கொண்டே இருந்தார். அவருக்குத் தண்ணீர் கொஞ்சம் தேவைப்பட்டது. அவரும் ஏ! கழுதை கொஞ்சம் தண்ணி கொண்டு வா என்றார்.

புருஷனுக்கு வந்ததே கோபம், என்னய்யா நினைத்தீர்? என் மனைவியை ஏ! கழுதை என்று நீர்

எப்படி சொல்லலாம் என்று சண்டைக்கு வந்து விட்டார். நண்பர் சொன்னார் : எப்பா நான் கழுதைன்னு சொல்லலை. உங்க மனைவியை நீர் அடிக்கடி அப்படி சொன்னதினாலே அது அந்தம்மா பேர் தான் என்று நினைத்து நானும் அப்படி அழைத்தேன் என்றாராம். அன்றைக்குத்தான் இவருக்கு புத்தி வந்தது.

உங்களுடைய மனைவியினுடைய திறமையான தாலந்துகளை பாராட்டுங்கள். அடுத்தவர்களிடத்தில் இவர்களை அறிமுகம் பண்ணும் போது இவர்களது நற்காரியங்களைச் சொல்லிப் புகழுங்கள். அப்பொழுது உங்கள் மனைவியின் மனதில் உயர்ந்து நிற்பீர்கள். அப்படி சதாகாலமும் அவர்களைக் குற்றப்படுத்தி மற்றவர்கள் முன்பு இடித்தும் குறைத்தும் பேசினால் மனைவியின் அன்பை இழப்பது மாத்திரமல்ல. சில வேளைகளில் மனைவியையே இழக்க நேரிடும்.

இது ஒரு இடத்தில் நடந்த உண்மைச் சம்பவம் ஒரு புருஷன் தன் மனைவியை எப்பொழுதும் மட்டம் தட்டி மனம் உடைகிற அளவுக்கு பேசிக்கொண்டே இருந்தார். அந்தப் பெண் தினமும் அழுதுகொண்டே இருந்தாள். அதைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரர் அந்தம்மாவுக்கு அடிக்கடி ஆறுதலான வார்த்தை சொல்வார். இந்த அடிக்கடி சந்திப்பும் ஆறுதலான வார்த்தையும் இந்தப் பெண்ணின் அடிமனதில் அசைவை உண்டுபண்ணியது. அசைவு அன்பாக மாறியது. பின்பு வம்பும் வந்தது. அன்பில்லாத புருஷனை விட்டு ஆறுதல் சொன்ன அவனோடு கிளம்பி விட்டாள்.

ஆகையால் புருஷரே உங்கள் மனைவிகளை கனம் பண்ணி மகிழ்ச்சியூட்டுங்கள். நாங்கள் ஆவிக்குரியவர்கள் என்று அதிக நீதிமான்களைப் போல உங்களைக் காட்டிக் கொள்ளாதீர்கள் 'விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படி



பிரியமாயிருக்கலாம் என்று கவலைப்படுகிறான்' என்று பவுலடிகள் (I கொரி 7 : 33) சமுதாய பிரமாணத்தை அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறார்.

போதகர் பால் யாங்கி சோ தனது சொந்த அனுபவத்தை தமது புத்தகங்களில் தயக்கமின்றி தெளிவாக எழுதியிருக்கிறார். எப்பொழுது பார்த்தாலும் ஊழியம், ஜெபம், கூட்டங்கள் என்று வெகு அலுவலாக இருப்பாராம். மனைவியினிடத்தில் முகங்கொடுத்து பேசுவதற்கு நேரமும் மனமும் இல்லாதவராய் இருந்தாராம். அவருடைய மனைவி மிகவும் மனம் நொந்து, வெந்து, குறுகி மெலிந்து போய்விட்டாராம். ஒருநாள் திடீரென்று சோவின் மாமியார் சோ அவர்களை அழைத்து என் மகளுடன் நீர் குடும்பம் நடத்தப் போகிறீரா? இல்லையா? என்று கடிந்து கொண்டாராம்.

நிலை தடுமாறிய சோ ஆண்டவரிடத்தில் ஜெபித்தாராம். கர்த்தர் சோவைப் பார்த்து நீர் யாரை எப்படி நேசிக்கிறீர் என்று கேட்டாராம் அப்பொழுது சோ 'ஆண்டவரே முதலில் உம்மை நேசிக்கிறேன் இரண்டாவது என் சபையை நேசிக்கிறேன் மூன்றாவது என் மனைவியை நேசிக்கிறேன்' என்றார். அதற்கு ஆண்டவர் 'மகனே உன் வரிசையை மாற்றி அமை. முதலில் என்னை நேசி, இரண்டாவது உன் மனைவியை நேசிக்க வேண்டும், மூன்றாவது உன் சபையை நேசி உன் ஊழியம் வளர வேண்டுமானால் உன் மனைவி பிள்ளைகளை முதலாவது நேசி என்றார்.

அது முதற்கொண்டு போதகர் யாங்கி சோ எவ்வளவு அலுவல் இருந்தாலும் வாரத்தில் ஒருநாள் தன் குடும்பத்திற்காக ஒதுக்கி விசேஷமாக அந்த நாளில் தன் மனைவியோடு சந்தோஷமாக பேசி வெளியே சென்று மகிழ்ச்சியாய் செலவிடுகிறாராம்.

அதனால் அவர் ஊழியம் வளருகிறதே தவிர வறளவில்லை.

இவரது அனுபவத்தை படிப்பதற்கு முன்பு நானும் அப்படித்தான் இருந்தேன். இதைப் படித்த பிறகு வாரந்தோறும் அப்படி செய்யாவிட்டாலும் வாய்ப்பு இருக்கும் போது அருகிலிருக்கும் பூங்கா மற்றும் உணவகத்திற்கு சென்று வருகிறோம் உண்மையிலே இது பயனுள்ளதாய் இருக்கிறது. மனைவியில் அன்புகூருங்கள். அவர்களை போஷியுங்கள் அவர்களை கனம் பண்ணுங்கள்.

**மனைவியை கசந்து கொள்ளாதிருங்கள் :**

புருஷர்களே உங்கள் மனைவிகள் மேல் கசந்து கொள்ளாதீர்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொலோ 3 :19–இல் எழுதுகிறார். மனைவியானவள் பலவீனப் பாண்டம் என்று பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிடுகிறார் (I பேதுரு 3 : 7). அவள் சரீர பலவீனத்தினிமித்தம் சில காரியங்கள் செய்ய அவர்கள் தவறுகிற போது அவர்களை கசந்து கொள்ளாதிருங்கள். பெலவீனரைத் தாங்குங்கள் என்று எழுதியிருக்கிறதே தவிர தாக்குங்கள் என்று எழுதவில்லை.

எனவே மனைவியானவளுக்கு கூடுமானவரை உங்களால் கூடுமான உதவிகளை சரீரத்தில் செய்யுங்கள். அதில் தவறு ஏதும் இல்லை (அதற்காக அடுப்படியை காண்ட்ராக்ட் எடுக்காதீர்கள். புருஷராய் நடந்து கொள்ளுங்கள்) அப்படி நீங்கள் செய்வதினால் உங்கள் அன்பை வெளிப்படுத்துவதோடு உங்கள் தோழியாகிய மனைவிக்கு சரீரப் பிரகாரமான நன்மை செய்கிறீர்கள்.

ஒருவேளை உங்கள் மனைவிக்கு உங்களைப் போன்ற அறிவு முதிர்ச்சி இல்லாமல் போகலாம். நீங்கள்



விரும்புகிற தாலந்துகள் இல்லாமல் போகலாம். அதற்காக உங்கள் மனைவியை லாயக்கற்றவள் என்று கசந்து கொள்ள வேண்டாம். நாம் கூடத்தான் அநேகக் காரியங்களில் தவறுகிறோம். அதற்காக தேவன் நம்மைத் தள்ளிவிட்டால் நாம் எங்கே போய் நிற்போம்.

ஆகையால் புருஷர்களே கிறிஸ்து உங்களை மன்னிக்கிறது போல, தயவு பாராட்டுகிறது போல உங்கள் மனைவிக்கு மன்னிப்பையும் தயவையும் தாராளமாய் அளியுங்கள்.

உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனி தரும் திராட்சைக் கொடி என்று சங்கீதம் 128–இல் வாசிக்கிறோம். மனைவி ஆலமரமும் அல்ல கேதுரு மரமும் அல்ல, திராட்சைக்கொடி. திராட்சைக்கொடி சிறந்த முறையில் கனி கொடுக்க வேண்டுமானால் தோட்டக்காரன் திறமையுள்ளவனாய் இருக்க வேண்டும். நல்ல தோட்டக்காரன், பந்தலிட்டு – பக்குவமாய் படரவிட்டு – கச்சிதமாய் கிளை நறுக்கி, கனி கொடுக்க வைப்பது போல், மனைவியானவளை நடக்க வேண்டிய வழிகளில் பக்குவமாய் நடத்தி அவளது குறைவுகளை நாசூக்காய் நறுக்கிவிட்டு உரமிடுவது போல் உற்ற ஆலோசனை தந்து வந்தால் நற்கனிகள் தந்திடுவாள் என்பது உண்மையன்றோ.

அதை விடுத்து சினமெடுத்து போர்தொடுத்து அடுத்தடுத்து கசந்து கொண்டால் மனம் கடுத்து மனைவி மாண்டு போவாள்.

ஒரு குடும்பத்தில் ஒரு நூதனமான சண்டை நடைபெற்றது. புருஷனுக்கு மனைவி ஆவலோடு காப்பி கொண்டு வந்தாள். என்ன காரணத்தினாலோ புருஷன் கை நீட்டி வாங்கும் போது காப்பிக் கோப்பை தவறி கீழே விழுந்து விட்டது. உடனே புருஷன்

சாரிம்மா (Sorry) நான் எங்கேயோ பார்த்து வாங்கிட்டேன் என்றான். உடனே அம்மனைவி இல்லைங்க தப்பு என்மேலதான். நான் தான் சரியாகத் தரவில்லை என்றாள். உடனே புருஷன் தப்பு என்மேலேதான் என்றான். மனைவி மறுமொழியாக தப்பு என்மேல் தான் என்றாள். ஆக தப்பை தங்கள் மேல் ஏற்றுக் கொள்ள அங்கே ஒரு அன்புச் சண்டை நடந்தது.

ஆனால் இதே சம்பவம் வேறு குடும்பத்தில் நடைபெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். புருஷன் கேட்டிருப்பான் உனக்கென்ன கண்ணா அவிஞ்சுபோயிருச்சி. உடனே மனைவி சொல்லியிருப்பாள் எனக்கு கண் அவியலை உங்க நினைப்பு எங்க போச்சு என்று பொரிந்திருப்பாள். அங்கு அன்புச் சண்டை நடந்திருக்காது. வம்புச்சண்டைதான் நடந்திருக்கும். புருஷர்களே உங்கள் மனைவிகளின் தவறுகளை பெருந்தன்மையோடு கண்டு கொள்ளாதிருங்கள்.

போதகர் சுந்தரம் அய்யா அவர்கள் திருமண ஆராதனைகளில் இப்படி சொல்வார். (Wedding is like welding) இரண்டு வெவ்வேறு இரும்புத் துண்டுகளை ஒன்றாக பற்ற வைப்பது போல் இரண்டு உள்ளங்களை நிலையாய் இணைப்பதே திருமணம் என்பார். மற்றுமொரு போதகர் சொல்லுவார். திருமணம் என்பது கான்டேக்ட் அது காண்ட்ரேக்ட் அல்ல (Marriage is a contact not contract) கொஞ்ச காலம் விடுத்து பிறகு விட்டு விடுகிற குத்தகை அல்ல, அது ஒரு கூட்டு சேர்க்கை என்பார்.

எனவே பிரியமானவர்களே! பிரசங்கி சொல்வது போல மாயையான நாட்களிளெல்லாம் நீ நேசிக்கிற (?) மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவ வாழ்வை அனுபவி இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும் நீ



சூரியனுக்குக் கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே.

## மனைவிக்கு துரோகம் செய்யாதிருங்கள் :

உன் உடன்படிக்கையின் மனைவியானவளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று மல்கியா 2–ஆம் அதிகாரம் வசனம் 15, 16–இல் இரண்டு முறை குறிக்கப்பட்டுள்ளதை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரே சரீரமாய் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட குடும்பங்களை பிரிக்கும்படி நூதனமான ஆவியை சத்துரு புருஷன் மனைவிக்குள் அனுப்பியிருக்கிறான். இந்த ஆவிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டியது மிகவும் அவசியம் தள்ளி விடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்கிறார் (மல்கியா 2 : 16)

தள்ளி விடுதல் இருவகை, ஒன்று மனைவியை வேண்டாம் என்று குடும்பத்தை விட்டு தள்ளி விடுதல். மற்றொன்று மனைவி என்று பெயரில் என்னோடு வாழட்டும் மாம்ச உறவு இல்லையென்று மனைவியைக் குமுற வைக்கும் கொடூரமான தள்ளி விடுதல்.

இவ்வகை (இரண்டாவது) தள்ளி விடுதல் பல குடும்பங்களில் பிரவேசித்து ஒரு மௌன மரணத்தைப் பிறப்பித்துக் கொண்டிருக்கிறது.

இதை வாசிக்கும் அன்பரே உமது மனைவிக்கு செலுத்த வேண்டிய அன்பை முழுமையாக செலுத்தாமலிருப்பதோ அல்லது ஒரு பகுதியை வேறு திசைக்கு திருப்பி விடுவதோ உமது மனைவியை தள்ளி விடுவதற்கு சமம் என்று அன்போடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒருவன் என் ஆலயத்தை கெடுத்தால் நான் அவனைக் கெடுத்துப் போடுவேன். உமது சரீரத்தின்

ஒரு பங்காகிய உமது மனைவி தேவனுடைய ஆலயம், நீரும் ஓர் தேவனுடைய ஆலயம். நீர் அதைக் கெடுத்துப் போடுவீரானால் தேவன் உம்மைக் கெடுத்துப் போடுவார்.

வேறு ஒருவரோடு தொடர்பு கொள்வது மாத்திரம் துரோகமல்ல. உன் மாம்சமானவளுக்கு உண்மையை மறைப்பதும் துரோகம் தான். உம்முடைய சம்பளம் எவ்வளவு என்றும் நீர் எங்கே போய் வருகிறீர் என்றும் உமது மனைவிக்குத் தெரியாதென்றால் நிச்சயம் நீர் உமது மனைவிக்கு துரோகம் செய்கிறீர். உமது மனைவியை இதில் நம்பவில்லை.

உங்கள் மனைவி உங்களுடைய அதிகாரி அல்ல. அவள் உங்களுடைய தோழி. உமது வாலவயதில் தோழர்களோடு எப்படி உங்கள் அந்தரங்கத்தையும் வெளியரங்கத்தையும் பகிர்ந்து கொண்டீர்களோ அப்படியே உங்கள் வாழ்க்கைப் பாதையில் உயிருள்ள வரை உற்ற தோழியாக இருக்க உடன்படிக்கை செய்துள்ள மனைவியினிடத்தில் தைரியமாய் அதே சமயம் தாழ்மையாய் உண்மையோடு உணர்வோடு சொல்லுங்கள்.

உங்கள் வாழ்க்கை உங்கள் மனைவியின் முன்பு ஒரு திறக்கப்பட்ட புத்தகமாய் இருக்கும் அப்பொழுது உங்களைப் பிரிக்க எந்த சக்திகள் எந்த வடிவத்தில் வந்தாலும் வந்த வழியே ஓடி வாடி மடிந்து போகும்.

நீங்கள் பகிர்ந்து கொள்ளும் போது பெலவீனமான உங்கள் மனைவி ஆவேசப்படலாம். அதிர்ந்தும் போகலாம் ஆனால் பாதகம் ஒன்றும் ஏற்படாது. மாறாக பாசமும் பரிவும் பராமரிப்பும் பத்து மடங்கு கூடிவரும் அத்தோடு கூட சில ஆலோசனைகளும் அதிகார சட்டங்களும் அவளிடத்திலிருந்து பிறக்கலாம் அதை நீங்கள் அல்லத் தட்டி விடாதீர்கள்.



நம்முடைய வாழ்வின் அனைத்தையும் அறிந்தவர் ஆண்டவர். அடுத்து அறிந்தவர்கள் பெற்றோர். அவர்களை விட சற்று கூடுதல் அறிந்தது நம்முடைய மனைவி அத்தோடு இல்லாமல் தேவனுடைய ஆவி நம்முடைய மனைவியிடத்திலும் உண்டு. ஒரு சில வேளைகளில் குறைவுள்ள ஆலோசனைகள் பெண்களிடத்திலிருந்து வந்தாலும், மதிப்பிட முடியாத முத்தான சத்தான ஆலோசனைகள் பெண்களிடத்தில் பிறப்பது உண்மை.

விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம் வாழ்க்கையில் ஒரு குடும்பப் பிரச்சனை. சாராள் அதிகாரத்தோடு ஒரு ஆலோசனை கொடுக்கிறாள். ஆபிரகாம் கீழ்ப்படியலாமா வேண்டாமா என்று யோசிக்கவில்லை அவளுடைய வார்த்தையின்படியே ஆகாரையும் அவள் மகனையும் ஆபிரகாம் அனுப்பி விட்டான். அது தேவனுடைய சித்தம் தான் என்று பின்னர் அவன் அறிந்து கொண்டான். மனைவிகள் தேவனால் அருளப்பட்ட நல்ல ஸ்தானாதிபதிகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

மனைவி சொல்லுக்குக் கீழ்ப்படிவதா? என்று மமதை கொள்ளாதீர்கள். ஏனோ தெரியவில்லை. கிறிஸ்தவ உலகம் பாதி வசனங்களையே படிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறது. திருமணத்தை நடத்துகிற போதகர்கள் எபேசியர் 5–ஆம் அதிகாரம் வசனம் 22 முதல் 33 வரை வேதபாடமாக வாசிக்கிறார்கள். ஏன் வசனம் 21–ஐ சேர்த்து வாசித்தால் என்ன? ஏன் இந்த பிசினித்தனம் என்று எனக்குப் புரியவில்லை. எபேசியர் 5 : 21 என்ன சொல்லுகிறது கீழே வாசியுங்கள்.

‘தெய்வ பயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்’ இதைப் படிப்பதற்கு வேப்பங்காய் போல இருந்தாலும் வேத வசனம் என்பதை மறந்து விடக் கூடாது. கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு

அருளின நன்மையான ஈவாகிய திராட்சைக் கொடி போன்ற உடன்படிக்கைத் தோழியெனும் மனைவி சொல்லும் வார்த்தைகளுக்கு வாய்ப்பளித்து கீழ்ப்படிந்து பாருங்கள் நிச்சயம் உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் குற்றமற்றதாய் கர்த்தருடைய வருகை வரைக்கும் இருக்கும்.

மனைவியின் சொல்லை செவிமடுத்துக் கேளாதவன் எங்கோ மாயவலையில் சிக்கிவிட்டான் என்று அர்த்தம்.

அநேகக் கணவன்கள், மனைவிமார்கள் வாய் திறப்பதற்கே வாய்ப்பளிப்பதில்லை. வாயாடிகளுக்கு வாய்ப்பூட்டு போடலாம் தப்பில்லை. ஆகிலும் பொல்லாதவளாக இருந்தாலும் பேசவிடுங்கள். நீங்கள் புடமிடப்படுவீர்கள் பொன்னாவீர்கள். அவள் சண்டைக்காரி என்று சாக்கு சொல்லாதீர்கள். நீங்கள் நன்மை செய்ய வேண்டும் என்று தான் சத்தம் போடுகிறாளே தவிர நீங்கள் நலிந்து போக வேண்டும் என்று சண்டை அவள் போடுவதில்லை.

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற பழமொழி நினைவு கூறப்பட வேண்டிய ஒன்று. அடித்து உதைத்து அம்மா வீட்டிற்கு அனுப்புவதால் அவள் திருந்தி விடப் போவதுமில்லை. வருந்தி வீடு திரும்பப் போவதுமில்லை. மனைவியானவளை அவள் ஸ்தானத்தில் நிறுத்துங்கள். அவளின் வார்த்தைகளுக்கு செவிகொடுங்கள். அந்த வார்த்தைகளுக்கு முன் உங்களை சீர் தூக்கிப் பாருங்கள்.

அப்பொழுது உங்கள் மனைவி யார் என்று உங்களுக்குத் தெரியும். கடிந்து கொள்ளுதலை வெறுக்கிறவனோ மிருக குணமுள்ளவன் என்று நீதிமொழிகள் சொல்லுகிறது.



உங்கள் மனைவியைத் தவிர எந்த ஒரு பெண்ணும் உங்களுக்கு அளிக்கிற புகழ்ச்சியான வார்த்தைகளை நம்பாதீர்கள். ஏற்றுக் கொள்ளாதீர்கள். அவைகள் நேசவலைகளைப் போல் தெரிந்தாலும் உண்மையில் அது நாச வலைகள். கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனை எனக்குத் தெரியும். அவருடைய குறிப்பிட்ட மிகச்சிறந்த தாலந்தை குறிப்பிட்ட மனுஷி புகழ்ந்து கொண்டே இருந்தாள். இவருக்கு அவர்கள் மேல் அன்பு பிறந்தது. முடிவு அவர் ஊழியத்தில் இல்லை. மனைவியோடும் இல்லை பிள்ளைகளோடும் இல்லை. வந்தவளோடு விட்டு வந்த வேலையை மீண்டும் தொடங்கி வெம்பி வெதும்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

உங்கள் உடலும் உடைமையும் உங்கள் மனைவிக்கே முழுவதும் சொந்தம். தேவன் உங்களை பரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படி உங்களுக்கு நல்ல மனைவியைக் கொடுத்திருக்கிறார். ஆகவே அவளுக்கு அறியாமல் எந்தக் காரியத்தையும் நீங்கள் செய்யாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

அன்புச் சகோதரரே உங்கள் மனைவியைப் போல் அழகானவர் உலகத்தில் வேறு யாருமில்லை. காரணம் நீங்கள் தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே உங்கள் உருவத்தைக் கண்டவர் உங்களுக்கு ஏற்றவாறே உங்கள் மனைவியை வடிவமைத்திருக் கிறார்.

உங்கள் மனைவியைப் போல் அறிவுள்ளவர்கள் இந்த உலகத்தில் வேறு யாருமே கிடையாது. காரணம் ஆழங்களை ஆராய்ந்தறிந்திருக்கிற ஆவியானவர் அவர்களுக்குள் இருக்கிறார்.

உங்கள் மனைவியைப் போல் உங்களை நேசிக்கத்தக்கவர் இந்த உலகத்தில் வேறு யாருமில்லை. காரணம் உங்களுக்காகவே தனது பெற்றோரையும் வீட்டையும் விட்டு விட்டு வந்து 24 மணி நேரமும் உங்களுக்காய் பம்பரமாய் உழைக்கின்றாள்.

**ஆகவே நீங்கள் :**

உங்கள் மனைவியில் அன்பு கூறுங்கள்.

உங்கள் மனைவியை போஷித்துக் காப்பாற்றுங்கள்

உங்கள் மனைவியை கனம்பண்ணுங்கள்

உங்கள் மனைவியை கசந்து கொள்ளாதீர்கள்

உங்கள் மனைவிக்கு துரோகம் செய்யாதிருங்கள்.

அப்போது கிறிஸ்து உங்களிலும் உங்களைக் கொண்டும் மகிமைப்படுவார்.



# 4

## மனைவிகளே !

உலகத்தில் பெண் உண்டாக்கப்பட்டதின் முதன்மையான நோக்கம் 'மனைவி' என்ற உறவிற்காகவே, ஆதாமின் தனிமையைப் போக்க ஏற்ற துணையாய் இருக்க தேவனுடைய அநந்த ஞானத்தின் வெளிப்பாட்டின் மகுடமே மனைவியானவள், ஆகையால் சகோதரிகளே! உங்களைக் குறித்த தேவனுடைய திட்டம் மகா உன்னதமானது என்பதை நீங்கள் உணருதல் அவசியம். இந்த உலக வாழ்க்கை சக்கரத்தில் உன்னதமான பொறுப்பு உங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் பெண்ணாகப் பிறந்ததும் திருமணம் செய்து கொண்டதும் பிள்ளைகள் பெறுவதும் ஏதோ இந்த உலகத்தின் வழக்கத்தின்படி நடந்துவிட்ட தற்செயல் விபத்து என்று நினைத்துவிடாதீர்கள். அதனதன் காலத்தில் அதனதன் காரியங்களை நேர்த்தியாய் செய்கிற ஆண்டவர் ஆணை சிருஷ்டித்து அவனுக்கு இணையாகப் பெண்ணை உருவாக்கி பரிசுத்தமான சந்ததியைப் பெற்று இந்தப் பார்தலத்தை நிரப்பி பரம சேனையாய் பாடித் துதிக்கவே இந்த மனுக்குலத்தை நியமித்திருக்கிறார். இந்த மனுஷ

வாழ்வின் மையப் பகுதியே பெண்கள் தான் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

புருஷனானவன் ஸ்திரீக்குத் தலையாயிருக் கிறான் என்று வேதம் சொல்கிறது. தலையில்தான் மூளை இருக்கிறது வாய் இருக்கிறது. கண் இருக்கிறது. எனவே குடும்பத்தில் யோசிக்க வேண்டிய பொறுப்பும் கட்டளையிட வேண்டிய பொறுப்பும் தலையாகிய புருஷனிடத்தில் இருக்கிறது. அதே சமயம் வெறும் தலை ஒன்றையும் சாதித்துவிட முடியாது. தலையை நிமிர்ந்து நிற்கச் செய்யும் சரீரமே மனைவியானவள்.

சரீரத்தில் தான் இதயம் இருக்கிறது. இதயம் நின்று போனால் தலை என்னவாகும்? என்பதை யோசித்துப் பாருங்கள். புருஷனாகிய தலையினிடத்தில் மூளை இருக்கலாம். ஆனால் மனைவியாகிய உங்களிடத்தில் தான் இதயம் இருக்கிறது. இதயத்தின் வலிமையைப் பொறுத்துத் தான் தலைக்கு வாழ்விருக்கிறது. மூளை வேண்டுமானால் சற்று நேரம் ஓய்வெடுக்கலாம். இருதயம் சற்று ஒய்வெடுத்தால் என்னவாகும் யோசித்துப் பாருங்கள்.

ஆகையால் சகோதரிகளே! நீங்கள் ஒப்பற்றவர்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் தான் குடும்பத்தை இயக்கும் இதயங்கள். இரவு பகல் பாராமல் கடமையை கண்ணாய் கவனித்து வரும் சூத்திரதாரிகள். பெண்கள் தான் தேவ சித்தத்தின் நிறைவேறும் நிஜங்கள்.

இதயம் இயங்காத உடல் எப்படி பிணமோ அப்படியே மனைவி ஒத்துழைக்காத குடும்பமும் செயல் இழந்த குடும்பம். இப்படியிருக்க சகோதரிகளே



உங்களை தேவன் உண்டாக்கினதின் உன்னத நோக்கத்தை உணருங்கள்.

கணவர்களுடைய பொறுப்பை விட மனைவியைக் குறித்தே மாட்சிமையான பல கருத்துக்கள் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

நீங்கள் திராட்சைக் கொடி

நீங்கள் கர்த்தர் அருளும் ஈவு

நீங்கள் புருஷனுக்குக் கிரீடங்கள்.

நீங்கள் குடும்ப மானத்தைக் காப்பாற்று கிறவர்கள்

வீட்டைக்கட்டுகிறவர்கள்.

இப்படியெல்லாம் வேதம் உங்களைப் புகழுகிறது என்பதை நினைத்துப் பாருங்கள்.

ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற தமிழ்ப் பழமொழி உங்களைப் பொறுத்தவரை மெத்தவும் உண்மை. உங்களால் உங்கள் குடும்பத்தை ஒழுங்காய் கட்டவும் முடியும், ஒழித்துக் கட்டவும் முடியும். உங்களால் உங்கள் புருஷனை சங்கத்தில் உயர்ந்து நிற்க வைக்கவும் முடியும், சங்கத்தில் குற்றவாளியாக நிறுத்தவும் முடியும்.

உங்கள் குடும்பத்தின் இன்றைய நிலை என்ன? என்பதை யோசித்துப் பாருங்கள். என் புருஷன் குணப்படவில்லை. மாமியாரால் எனக்குப் போராட்டம் சத்துருவின் உபத்திரவம். ஆகையால் என் குடும்பம் அலைமோதுகிறது என்று பழியை வேறு பக்கம் திருப்பி விட முடியாது. உங்களுக்குள்ளே அசாத்தியமான பெலன் இருக்கிறது. உங்கள் குடும்பம் சரிவர கிறிஸ்துவுக்குள் கட்டப்படாததற்குக் காரணம் உங்கள் குறைவான முயற்சிகளும் நிலையில்லாத

கிறிஸ்தவ அனுபவங்களுமே காரணம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அநேக சமயங்களில் நாம் யார் என்பதை மறந்து விட்டு குடும்பத்தில் நம்முடைய நிலை என்ன என்பதை மறந்து விட்டு, நிற்க வேண்டிய இடத்தில் நில்லாமல் நிலை தடுமாறி, செய்ய வேண்டியதை செய்யாமல், செய்ய அவசியமில்லாதவைகளை செயல்படுத்த இறங்குவதினால்தான் குதர்க்கங்களும் குழப்பங்களும் குடும்பத்தில் தோன்றுகிறது.

குடும்பத்தில் உங்கள் நிலை என்ன? அதை முதலில் உணருதல் அவசியம். நீங்கள் உங்கள் புருஷனுக்கு ஏற்ற துணை (Help meet). எனவே தலையாகிய அவருக்கு நீங்கள் கீழானவர்களே, காலங்கள் மாறலாம். தோஷங்கள் மாறலாம். புதுமைப் பெண்கள் என்று புனைந்து பல புரட்சிக்கவிகள் பாடலை இயற்றலாம். ஆகிலும் புருஷனானவனுக்கு நீங்கள் உதவிக்காய் உருவாக்கப்பட்டவர்கள் என்பதை உணருதல் அவசியம்.

தொடர்ந்து வருகிற பக்கங்களில் உங்கள் குடும்ப வாழ்வு செம்மையாயிருக்க கணவன் மனைவி உறவு கண்ணியமாய் நிலைத்திருக்க கர்த்தரின் வசனத்தை எடுத்துக் காட்டி மனைவிகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எழுத விரும்புகிறேன்.

### 1. கணவருக்குக் கீழ்ப்படியுங்கள் :

மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் (எபேசி 5 : 22). கணவன் எப்படிப்பட்டவராக இருந்தாலும் மனைவியானவள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல கீழ்ப்படிதல் மிகவும் அவசியம். கணவனுக்குக் கீழ்படியாதவளிடத்தில் என்னதான்



ஆவிக்குரிய இலட்சணங்கள் இருந்தாலும் செத்த ஈ விழுந்த தைலம் போல் இருக்குமே அல்லாமல் அவள் வாழ்வு எந்த சூழ்நிலையிலும் பரிமளிக்காது.

குடும்பத்தில் முடிவு எடுக்க வேண்டியது கணவனுடையதே. ஆலோசனை சொல்வதற்கு உங்கள் அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்வதற்கு எந்தவிதத்தடையுமில்லை. ஆகிலும் நீங்கள் சொல்வதை உங்கள் புருஷன் நிறைவேற்ற வேண்டும் என்று நினைப்பது மதியீனம். தேவ சித்தமும் அஃது அல்ல.

உங்கள் புருஷன் உங்களைக் காட்டிலும் அறிவிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் குறைந்தவராக இருக்கலாம். ஆனால் தலை(வர்) என்பதை அறிந்து என்ன சொன்னாலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிவது போல முற்றிலும் முறுமுறுப்பில்லாமல் கீழ்ப்படிய வேண்டும்.

அநேகர் கீழ்ப்படிகிறார்கள் ஆகிலும் குடும்பத்தில் பிரச்சினை, காரணம் என்ன தெரியுமா? கீழ்ப்படிகிறார்கள் முழுமனதோடு அல்ல முறுமுறுப்போடு புருஷனுக்கு கீழ்ப்படிவதினால் புருஷனுடைய மனநிலையை மாற்றி பொறுமையை இழக்க வைக்கின்றனர்.

அநேக மனைவிகள் தங்கள் கணவர்களிடத்தில் அடி உதை வாங்கி அழுகிறார்கள். அதற்குக் காரணம் கணவனின் பொல்லாத சுபாவம் அல்ல என்பதை தெளிவாய் எழுத விரும்புகிறேன். இணங்கிப் போகுதல் காரியத்தை அமர்த்திப்போடும் மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும் என்று நீதிமொழிகளில் அனுபார்த்தப் பூர்வமாக எழுதப்பட்டுள்ளது.

பெண்களுக்கு (வசை) பாடுவது கைவந்தகலை. கணவனிடத்தில் எதைத்தான் பேசுகின்றோம் என்ற விவரமே இல்லாமல் பேசிவிடுகிறார்கள். தெருவிலே வேடிக்கை காட்டும் பாம்பாட்டி அமைதலாய் இருக்கும் பாம்பை சீண்டிப் படமெடுக்க வைத்து முஷ்டியை நீட்டி கொட்ட வைப்பது போல பொறுமைசாலியான கணவன் மார்களை சுடுசொல்லாலேயே சுண்டி இழுத்து வம்பை விலையில்லாமல் வாங்கி விடுகிறார்கள்.

கொஞ்சம் குடும்பத்தில் மௌனமாயிருக்கக் கற்றுக் கொள்ளுங்களேன். என் புருஷன் என்ன சொன்னாலும் நான் பூரணமாய் கீழ்ப்படியப் போகிறேன் என்று திட்டமிட்டு (ஒரு வாரத்திற்கு) செயலாற்றிப் பாருங்களேன். உங்கள் கணவர் கரைந்து போவார். நிலைமையே தலை கீழாக மாறும் நீங்கள் என்ன சொன்னாலும் அவர் கேட்டு விடுவார்.

ஆண்கள் இருக்கிறார்களே அவர்கள் சுபாவமே அப்படித்தான். அவர்களுடைய மனநிலைக்கு இரண்டு வித்தியாசமான பக்கம் உண்டு. ஒரு பக்கம் தான் தான் தலைவன் என்கிற உயர்வு மனப்பான்மை. மறுபக்கம் மனைவிதாசன் என்று மற்றவர்கள் இகழ்ந்து விடுவார்களோ என்ற தாழ்வு மனப்பான்மை. மனைவிகள் தாங்கள், புருஷனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்கள் என்கிற தன்னம்பிக்கையை ஊட்டிவிட்டால் முக்கால்வாசி பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம்.

குணசாலியான ஸ்திரீயைக் குறித்துத்தான் வேதம் சொல்கிறது. ஆனால் பெண்களில் பலர் சாமர்த்திய சாலியாகவே இருக்க விரும்புகிறார்கள். ஒரு ஊழியக்காரர் தனது பிரசங்கத்தில் புருஷனே மனைவிக்குத் தலை என்று பிரசங்கித்தார். அதைக்



கேட்ட ஒரு அம்மா ஒரு நூதன வியாக்கியானம் கொடுத்தார்கள். அது என்ன தெரியுமா?

என்னுடைய கணவனார் எனக்குத் தலை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் என் வீட்டில் நான் தான் 'கழுத்து' கழுத்து எப்படி திரும்புகிறதோ அப்படியே தலையும் கூடச் சேர்ந்து திரும்பிக்கொண்டிருக்கிறது என்று கணவன் மேல் தனக்குள்ள அதிகாரத்தை டம்பம் அடித்து சொன்னார்.

சகோதரிகளே, காணக்கூடாத தேவனுக்கு பிரதிநிதியாய் இருப்பவர் உங்கள் புருஷனே, உங்கள் சரீரப்பிரகாரமான தலையை நீங்கள் கனவீனம் பண்ணி கீழ்ப்படியாமல் போனால், காணாத சபையின் தலையாகிய தேவனுக்கு கீழ்ப்படிவீர்கள் என்று எப்படி நம்பமுடியும். கொஞ்சத்தில் உண்மையில்லாத உங்களை தேவன் எப்படி உயர்த்த முடியும் ஆகவே எல்லாவற்றிலும் உங்களை கணவனுக்குக் கீழ்ப்படுத்துங்கள். கிரீடமாய் மாறுவீர்கள்.

## 2. கணவரிடம் பயபக்தியாயிருங்கள் :

மனைவியானவள் புருஷனிடத்தில் பயபக்தி யாயிருக்கக்கடவள் என்று குடும்பங்களைக் கட்டும் சத்தியங்களை குறிப்பாக எழுதியுள்ள அப்போஸ்தலனாகிய பவுல் எபேசி 5 : 33–இல் தெளிவாய் சொல்கிறார். மனைவியானவள் பயந்தும் பக்தியாயும் இருத்தல் மிக அவசியம். அன்பினால் நிறைந்து கணவனை கௌரவமாய் நினைத்து கட்டளை எதுவானாலும் கனிவோடு செய்ய காத்திருப்பதே பயமும் பக்தியாகும்.

பயபக்தியாயிருப்பவள் எப்பொழுதும் தன் கணவனை மிக உயர்வாகவே நினைக்கிறாள். உயர்வாகவே பேசுகிறாள். சபை எப்படி தனது

மணவாளனாகிய கிறிஸ்துவை உன்னத நிலையில் வைத்துப் போற்றுகிறதோ அப்படியே மனைவி யானவள் புருஷனை உயர்த்தி கனப்படுத்திப் பேச வேண்டும். ஆணுக்குப் பெண் சமம் என்ற அவசியமில்லாத வாதத்தை அடியோடு தூக்கி எறிந்து விடுங்கள். ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அது பொருந்துமே தவிர அனுதின வாழ்க்கைக்கு ஒத்துவராது.

இவ்வகைக் கூற்றெல்லாம் மேடைப் பேச்சுக்கு ஒத்துவருமே தவிர நடைமுறைப் பயிற்சிக்கு சிறிதும் தேராது. சென்னையிலே வைரமுத்து என்ற பிரசித்தி பெற்ற கவிஞர் ஒருவர் இருக்கிறார். அவருடைய மனைவி பெண்களின் உரிமை குறித்து பிரமாதமாகப் பேசுவார். சென்னையில் உள்ள ஒரு பெண்கள் சங்கம் எங்கள் சங்கத்தில் பெண் விடுதலை பற்றி பேச வரவேண்டுமென்று அவர்களை அழைத்தார்கள். அதற்கு அவர் மனைவி என்ன சொன்னார் தெரியுமா? ‘நாளைக்குப் போன் செய்யுங்கள் கூட்டத்திற்குப் போகலாமா என்று என் கணவரிடம் அனுமதி கேட்டுச் சொல்கிறேன்’ என்றாராம்.

நான் இங்கு இதைக் குறிப்பிடக் காரணம் பேசப் போவது பெண் விடுதலை பற்றி ஆனால் கேட்கப் போவது புருஷனிடம் அனுமதி பார்த்தீர்களா! இந்த இயற்கை சூத்திரத்தை எவராலுமே மாற்ற முடியாது.

முந்தி மனுஷன் உண்டாக்கப்பட்டான். பிந்தியே ஏவாள் உண்டாக்கப்பட்டாள். ஏவாளிலிருந்து ஆதாம் அல்ல ஆதாமிலிருந்து ஏவாள் உண்டாக்கப்பட்டதினால் உங்கள் புருஷனை கனம்பண்ண வேண்டியது உங்கள் கடமை.

உங்கள் கணவனை அழைப்பதிலும் ஒரு கனத்தை நீங்கள் பின்பற்ற வேண்டும்.



விசுவாசிகளின் தாயாகிய சாராள் தனது கணவனை ஆண்டவனே என்று அழைத்தாள். இப்பொழுது மனைவிகள் புருஷனை ஆண்டவனே என்று அழைக்காவிட்டாலும் பரவாயில்லை. பலர் தங்கள் புருஷனை ‘ஏண்டா’ என்று அழைப்பதையாகிலும் நிறுத்தி விட வேண்டும்.

இது ஏதோ கூட்டி மிகைப்படுத்தி எழுதப்பட்ட வாசகம் அல்ல. கடந்த நாளில் ஒரு ஆவிக்குரிய குடும்பத்தில் (?) நடைபெற்ற சம்பவம் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. புருஷனுக்கும் மனைவிக்கும் இடையில் பிரச்சினை சமாதானம் செய்து வைக்க இரண்டு ஊழியர்கள் சென்றிருந்தோம். அந்த சகோதரி என்னிடம் அவள் புருஷனைப் பற்றிப் பேசிய அரைமணி நேரத்தில் குறைந்த பட்சம் ஒரு நூறு முறையாவது அவன் இவன் என்று சொல்லியிருப்பார். இப்படிப்பட்டவர் ஊழியரிடத்திலேயே இப்படி பேசும் போது தனிப்பட்ட முறையில் வீட்டுக்காரனை எப்படிப் பேசுவார் என்பதை யோசித்துப் பாருங்கள். இப்படிப்பட்டவர்கள் பத்து ஞானஸ்நானம் எடுத்தாலும் பாவமன்னிப்புக் கிட்டாது என்று யோசிக்கிறேன்.

ஒருமுறை என் அலுவலகத்தில் உட்கார்ந்து கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு ஊழியக்காரர் கடிதம் எழுதி இருந்தார். ‘பாஸ்டர் குடும்பத்தில் சண்டை சமாதானமில்லை. தூக்கமாத்திரை சாப்பிட்டு சாகப் போகிறேன் முடிந்தால் வந்து பாருங்கள்’ இவ்வளவே கடிதம். உடனே நானும் ஒரு கடிதம் எழுதினேன். எனக்கும் சேர்த்து தூக்க மாத்திரை வாங்கி வை உடனே வருகிறேன் (அஞ்சல் செய்யவில்லை). ஜெபித்தேன் நேரடியாகப் போக வேண்டுமென்று ஆவியானவர் ஏவினபடியால் உடனே

புறப்பட்டு சென்றேன்.

பிரச்சினைக்குக் காரணம் வேறொன்றுமில்லை. மனைவி எதற்கெடுத்தாலும் என்னடா நீ! என்று கேட்கிறாள் இப்படிப் பேசினால் புருஷனுக்கு கோபம் வராதா? உதைக்க மாட்டானா? உடனே அவர்கள் சும்மாயிருப்பார்களா ஊரைக் கூட்டுவார்கள். ஊழியக்காரன் மனைவியை அடிக்கலாமா? பஞ்சாயத்துப் பேச ஆரம்பிப்பார்கள்.

மனைவியை அடிக்கலாமா வேண்டாமா என்பதைக் குறித்து பட்டிமன்றம் வைத்துத் தீர்த்துக் கொள்ளுங்கள். அடிதடிக்கு அடிப்படைக் காரணம் என்ன? அதை முதலில் ஆராய்ந்து அகற்றுவோம். திரியைக் கிள்ளி விட்டால் பட்டாசு வெடிக்காது. கோபமான வார்த்தைகளை எழுப்பாத வரை உங்கள் கணவன் குணக்குன்று மறந்து விடாதீர்கள்.

பல குடும்பங்களில் நூதன ஆவி பெண்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. சொந்தப் புருஷனை ஏய் சொட்டையா, அவன் கிடக்கிறான் கடன்காரன். இப்படியெல்லாம் நாக்கூசாமல் பேசுகிறார்கள். நியாயத் தீர்ப்பு நாளில் உங்கள் பங்கு அதிகமாக இருக்கும். அது மாத்திரமல்ல, உங்கள் சந்ததி உங்களைத் தாயென்று சொல்லவே வெட்கப்படும்.

உங்கள் கணவர் உள்ளத்தின் ஆழத்தில் உங்கள் மேல் ஒப்பிடமுடியாத அன்பு வைத்திருக்கிறார் என்பதே உண்மை. அந்த அன்பினிமித்தம் உங்களிடம் அதிகம் எதிர்ப்பார்க்கிறார். அத்தோடு மனதிற்குண்டான ஆறுதலையும் தேறுதலையும் உங்களிடத்தில் எதிர்ப்பார்க்கிறார். சாராள் மரித்துப் போன பிறகு ஈசாக்குடைய வாழ்க்கையில் துன்பப்புயல். ஆனால் ரெபேக்காள் வந்த போதோ தன் தாயை இழந்த



துக்கத்தை மறந்து ஆறுதலடைந்தான் என்று எழுதியிருக்கிறது.

அன்பு சகோதரியே, நீ என்றைக்காகிலும் உன் கணவனாரிடத்தில் ஆறுதலான வார்த்தை பேசினது உண்டா? துக்கத்தினாலும் பாரத்தினாலும் நிறைந்தவராய் உங்கள் புருஷன் வரும் போது வசனத்தினாலும் வார்த்தையினாலும் அவரை ஆற்றித் தேற்றியது உண்டா?

வெளியுலகிலும் வேலை ஸ்தலத்திலும் சந்தித்த பிரச்சினையினால் மனம் பாதிக்கப்பட்டு பதட்டத்தோடு வரும் அவரை பாசத்தோடு அழைத்து பரிவோடு பணிவிடை செய்து அவர் பதட்டத்தைக் குறைத்தது உண்டோ? அப்படி நீங்கள் செய்திருப்பீர்களாகில் நீங்கள் உங்கள் புருஷனுக்குக் கர்த்தர் தந்த ஈவு. அப்படி செய்யாமற் போவீர்களாகில் நீங்கள் உங்கள் புருஷருக்கு நோவு.

### 3. நற்குணத்தால் அலங்கரித்துக் கொள்ளுங்கள்

பெண்கள் என்றாலே அலங்காரம் என்றுதான் முதன்மையான நினைவுக்கு வரும். இயற்கையிலேயே ஆண்டவர் பெண்களை ஆண்களை விட அழகாக சிருஷ்டித்திருக்கிறார். மனித குலத்தை தவிர மற்ற எல்லா உயிரினங்களிலும் ஆண் இனந்தான் அழகுள்ளது. சேவலுக்கு கொண்டை, மானுக்குக் கொம்பு, யானைக்குத் தந்தம், மயிலுக்கு தோகை, இப்படி ஆண் இனங்களை அழகாகப் படைத்த ஆண்டவர் மனுக்குலத்தில் பெண் இனத்தைத்தான் வெகு அழகாகப் படைத்திருக்கிறார்.

இந்த இரகசியத்திற்கு ஒரு காரணம் உண்டு. மனிதனை மண்ணிலிருந்து உருவாக்கினார். ஆனால் பெண்ணின் மூலப்பொருளோ மண்ணல்ல ஜீவனுள்ள

மனிதனின் எலும்பு, அடிப்படையே வித்தியாசமாக இருப்பதனால் அழகும் வித்தியாசப்படுகிறது. ஆதியிலேயே மனுஷகுமாரத்திகள் அதிக சௌந்தரியமுள்ளவர்களாயிருந்தார்கள் (ஆதி. 6 : 2)

இப்படியிருக்க உலகத்தாரைப் போல பொய்யான பூச்சுகளினால் நம்மை அலங்கரித்து மினுக்கிக் கொள்ளத் தேவையில்லை. இந்த உலகத்தின் வேஷம் கடந்து போகிற ஒன்று. அழகும் வீண் சௌந்தரியம் வஞ்சனையுள்ளது. எனவே புறம்பான அலங்கரிப்பு முக்கியமல்ல. இராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள் (சங். 45 : 13) என்று சங்கீதக்காரன் சொல்லுகிறபடி ஆவிக்குரிய உள்ளான மனுஷன் அலங்காரமாய் இருத்தல் அவசியம்.

அப்போஸ்தலனாகிய பவுல் I தீமோத்தேயு 2–ஆம் அதிகாரம், 9, 10 வசனங்களில் அலங்கரிக்கத் தேவையில்லாதவைகளையும் அலங்கரிப்புக்கு வேண்டியவைகளையும் அழகுற வரிசைப்படுத்தி எழுதுகிறார். மயிரைப்பின்னுதல் பொன்னினாலும் முத்துக்களினாலும் விலையேறப்பெற்ற வஸ்திரங்களினாலும் நம்மை அலங்கரித்துக் கொள்ளக் கூடாது. இவைகளைக் குறித்த லௌகீகத் துக்கம் குடும்பத்தில் குழப்பத்தை விளைவிக்கும்.

தகுதியான வஸ்திரம், நாணம், தெளிந்த புத்தி இவைகளினால் மனைவியானவள் தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலனாகிய பேதுரு இதே மேற்கோளை வேறு விதமாய் விளம்புகிறார்.

மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரத்தை உடுத்திக் கொள்ளுதல் (I பேதுரு 3 : 3) புறம்பான அலங்கரிப்பு



என்றும் அமைதலும் சாந்தமுமே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்ற அலங்கரிப்பு என்றும் (I பேதுரு 3 : 4) எழுதியிருக்கிறார்.

ஆகவே ஸ்திரீயானவள் நவ நாகரீக உடையினால் அல்ல நற்குணத்தினால் அலங்கரித்துக் கொள்ள வேண்டும். நற்குணத்தில் அலங்கரிப்பதன் வெளிப்பாடு எப்படி இருக்கும்? உங்கள் புருஷனுடைய வீட்டாரை உள்ளன்போடு கூட நேசிப்பீர்கள். நீங்கள் அவர்களுக்குக் காண்பிக்கின்ற அன்பும் ஆதரவுமே உங்களுக்கு மிகச் சிறந்த அலங்கரிப்பாயிருக்கும். உங்கள் மாமியார் உங்கள் விரோதி அல்ல. உங்களை நேசித்துப் போஷிக்கும் உங்கள் கணவனாரைப் பெற்று வளர்த்து படிக்க வைத்து பேணிக்காத்து உங்களுக்குத் தந்திருக்கிற கொடையாளி.

ஆகவே சாந்தமுள்ள குணத்தினால் நிறைந்து உங்களை சார்ந்துள்ளவர்களை உபசரியுங்கள். உங்கள் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து உங்களை அலங்கரியுங்கள். இப்படி செய்வீர்களானால் கர்த்தர் உங்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.

## 4. குடும்பத்தில் சுறுசுறுப்பாயிருங்கள் :

குடும்பத்தில் மனைவியினுடைய பங்கு அதிக முக்கியமானது முழுக் குடும்பத்தை கட்டி ஆளுகின்ற உந்து விசையே நீங்கள் தான். எனவே உங்கள் குடும்பத்தின் பொறுப்புக்கு ஏற்ப நீங்கள் சுறுசுறுப்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும். நீதிமொழிகள் 31–ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள குணசாலியான ஸ்திரீயைக் குறித்து சொல்லப்பட்ட காரியங்களை கவனித்துப் பாருங்கள். அவளுடைய திறமையைக் குறித்து 15 வசனங்கள் மிக விளக்கமாக விவரிக்கிறது.

கடைக்குப் போவதும் அவள்தான்.

வீட்டுக்காரியங்களை கவனிப்பதும் அவள் தான். துணிமணிகள் தைப்பதும் அவள்தான். வீட்டுக் காரியங்களை முழுவதும் மேற்பார்வையிடுவதும் அவள் தான். அதை விட சிறப்பு அம்சம் என்னவென்றால் இருட்டோடு எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுக்கிறாள்.

பின் தூங்கி முன் எழுவாள் பெண் என்று தமிழகத்தில் ஒரு பழமொழி உண்டு. இப்போது அது தலைகீழாக மாறி விட்டது. இப்போதெல்லாம் பெண்கள் முன் தூங்கிப் பின் எழுகிறார்கள். கணவன் காப்பி போட்டுத் தர வேண்டும். அப்பொழுதுதான் அம்மா துயில் எழுவார்கள். நீங்கள் பெலவீனராய் இருந்தாலும் இதுவே உங்கள் பழக்கமானால் நிச்சயம் மாற்றிக் கொள்ளுங்கள்.

நான் பெலவீனமானவள் என்னால் வேலை செய்ய முடியாது என்று சொல்ல உங்களுக்கு வாய்ப்பில்லை. காரணம் இயற்கையிலேயே உங்களுக்குள்ளே மறைந்திருக்கும் மகா பெரிய பெலத்தை வைத்திருக்கிறார். ஆண்களை விட நீங்கள் நிர்வாக நிபுணர்கள். பெலத்தின் பெட்டகங்கள். அதனால் தான் பிள்ளையைப் பெற்றெடுக்கும் மிகப் பெரிய பலத்தை உங்களுக்குள் கொடுத்திருக்கிறார். ஆண்களை விட நீங்கள் பொறுமைசாலிகள், நீங்கள் திறமைசாலிகள்.

ஆண்கள் மரமானால் நீங்கள் வேர்கள். ஆண்கள் விளக்கானால் நீங்கள் சுடர் விடும் திரிகள். அடிப்படையே நீங்களாய் இருக்கும் போது அதற்கேற்றபடி நடக்க வேண்டாமா? நீங்கள் குன்றி உட்கார்ந்து கொள்வதினால் தான் குழப்பங்கள் எம்பி விளையாடுகிறது. நீங்கள் பிந்தி எழுவதினால் தான் பிரச்சனைகள் முந்தி எழும்புகிறது.



நீதிமொழிகளில் சொல்லப்பட்ட குணசாலியான ஸ்திரீயைப் பாருங்கள். அவள் அதிகாலையில் எழும்புகிறாள் இரவிலும் அவள் விளக்கு அணைவதில்லை. ஆகையால் அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷன் அவளை குணசாலிகளுக்கெல்லாம் மேற்பட்டவள் என்று புகழுகிறான்.

நீங்கள் சுறுசுறுப்பாய் இருப்பீர்களானால் உங்கள் புருஷனுக்கு மகிழ்ச்சியாவீர்கள். உங்கள் பிள்ளைகளுக்குப் புகழ்ச்சியாவீர்கள். இல்லாவிடில் சண்டையும் சச்சரவுமே தொடர் நிகழ்ச்சியாக இருக்கும்.

**5. கற்புள்ள நடக்கையினால் கணவரை இரட்சியுங்கள் :**

புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். அத்தோடு தன் வீட்டுக்காரனையும் கட்டுகிறாள். குணப்படாத கணவனை உடைய எந்த ஸ்திரீயும் கலங்கத் தேவையில்லை. வேதம் சொல்லுகிறது புருஷர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப் படியாதவர்களாய் இருந்தால் பயபக்தியோடு கூடிய தங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள் (I பேதுரு 3 : 2)

உங்கள் கணவன்மார்களை ஆதாயப்படுத்திக் கொள்ள போதனை முக்கியமல்ல. உபவாசமும் முக்கியமல்ல. உங்கள் கற்புள்ள நடக்கையே மிக முக்கியம். ஒரு பத்திரிகையில் படித்த ஒரு சுவையான கதையை இங்கு குறிப்பிட விரும்பிகிறேன்.

ஒரு பெந்தெகொஸ்தே விசுவாசி சபையில் எழும்பி, ''என் குடும்பத்தில் எனக்கு மிகுந்த உபத்திரவம். என் குடிகாரப் புருஷனிடத்தில் அடி உதை வாங்கிக் கொண்டு காலத்தை தள்ளுகிறேன். இன்றைக்குக் கூட ஆராதனைக்கு என் புருஷனிடத்தில் கடுமையான அடி உதை வாங்கிக் கொண்டுதான் இந்த ஆராதனைக்கு வந்தேன். ஜெபித்துக் கொள்ளுங்கள்'' என்று கண்ணீரோடு சாட்சி சொல்லி முடித்தாள்.

போதகருக்கு உள்ளம் நெகிழ்ந்து போயிற்று. எப்படியாகிலும் அவள் புருஷனைப் பார்த்து பேசவேண்டும் என்று ஆவலோடு அவள் வீட்டிற்குச் சென்றார். புருஷனைப் பார்த்து உமது மனைவியை ஏனய்யா அடித்தீர் என்று கேட்டார், 'பாஸ்டர் இவ உங்க கோயிலுக்கு வர்றாளே தவிர வீட்டில் ஒழுங்கு கிடையாது.

கோயிலுக்குப் போனாலாவது திருந்துவாள் என்றெண்ணி கோயிலுக்குப் போ என்று கட்டாயப்படுத்தினால் போகாமல் வீட்டிலே இருந்தாள். அதற்குத்தான் உதை கொடுத்து கோயிலுக்கு அனுப்பி வைத்தேன்' என்றான். போதகருக்கு சினம் வந்தது. கூடவே சிரிப்பும் வந்தது. அவளுக்கோ சிரம் தாழ்ந்தது. இப்படி மனைவி புருஷனிடத்தில் நடந்து கொள்வாளாகில் அவன் எப்படி இரட்சிக்கப்படுவான்.

இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு விசுவாசியாகிய சகோதரிக்கு குடிகாரனாகிய புருஷன் இருந்தான். அவன் எப்பொழுதும் குடித்து விட்டு வந்து அந்த சகோதரியை செமத்தையாக உதைப்பான். ஆனாலும் அந்த சகோதரி ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் என்று



சொல்லுவாள். ஆனால் ஒரு நாள் வழக்கம் போல புருஷன் அடித்த போது வழக்கம் போல் ஸ்தோத்திரம் செய்யாமல் புருஷன் கையைப் பிடித்துக் கொண்டு ஓ கர்த்தாவே என்று அழ ஆரம்பித்து விட்டாள்.

வழக்கத்திற்கு மாறான இவளது செய்கையினால் கலக்கமுற்றவன் தன் மனைவியைப் பிடித்துக் கொண்டு, 'எம்மா அழுகையை நிறுத்து என்ன விஷயம் சொல்லு' என்றான். அதற்கு மனைவி 'இத்தனை நாள் நீங்கள் அடிக்கும்போது அதிகமாக வலிக்கும் ஆனால் இன்று வலியே இல்லை. குடித்துக் குடித்து உங்கள் பெலனெல்லாம் போயிற்று. உங்கள் பெலவீனத்தை நினைத்து அழுதேன்' என்றாளாம்.

அவ்வளவு தான் அதைக் கேட்ட புருஷன் மனம் உடைந்து போனான். மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு ''எம்மா குடிச்சே சீரழிஞ்சு போனேன். இனி மேல் நான் ஒழுங்காய் இருக்க ஆண்டவர் அருள் செய்யனும் நீ எனக்காக ஜெபம் பண்ணு'' என்று கேட்டதோடு அதுமுதல் உண்மையாகவே கிறிஸ்துவின் அடிமையானான்.

அருமையான சகோதரியே, புருஷனை இரட்சிக்க போதனை அவசியமில்லை. உங்கள் கற்புள்ள கிறிஸ்துவுக்கேற்ற நடக்கையே மிக முக்கியம். ஆகையால் சகோதரிகளே உங்களைக் குறித்த சரியான வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் தேவ சித்தத்தின் சிறந்த பகுதி மனித வாழ்வின் மத்திய பகுதி நீங்கள் உங்கள் குடும்பத்தின் இயக்கு விசை. உங்கள் கணவனின் கிரீடம். இதை உணர்ந்து தேவ ஒத்தாசையோடு செயல்படுங்கள். உங்கள் சந்ததி உங்களை வாழ்த்தும். பரலோகம் மகிழும். இந்தப் பாரில் உங்கள் சாட்சி பரிமளிக்கும்.

# 5

# முடிவுரை

பிரியமானவர்களே தமது தயவுள்ள சித்தத்தின் படியே தேவன் உங்கள் குடும்பத்தைக் கட்டுவாராக நோவாவும் அவன் குடும்பத்தாரும் பேழைக்குள் பிரவேசித்தது போல முழுமையாக கர்த்தருடைய வருகையில் நீங்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

‘‘நீதிமானாகிய லோத்து’ என்று லோத்தைக் குறித்து வேதம் சொன்னாலும் அவன் சந்ததி தேவாலயத்திற்குப் புறம்பே தள்ளப்பட்டது. எனவே உங்கள் ஆவிக்குரிய வாழ்வினை உங்களுக்குள் குறுகிய வட்டமாக்காமல் குடும்பத்திற்குள் படரவிடுங்கள்.

உலகத்தைப் பார்த்து சீர்திருத்தம் பண்ணும் பல பரிசுத்தவான்கள் குடும்பத்தைக் கட்டாமல் தவறிவிட்டார்கள். இது தற்காலத்தில் நடப்பது மாத்திரமல்ல. ஆசாரியனாகிய ஏலியினிடத்திலும் அவனுக்கே புத்தி சொன்ன சாமுவேலிடத்திலும் இருந்தது. ஆகவே விழிப்புள்ளவர்களாய் –



வீரியமுள்ளவர்களாய் – விசுவாசமுள்ளவர்களாய் விவேகமுள்ளவர்களாய் விவிலியம் சொல்லும் குடும்பத்தைக் கட்டிடுங்கள்.

தீர்க்கதரிசிகளிலேயே ஏசாயாவினுடைய வாழ்வும் வார்த்தையும் எனக்கு பெரும் ஆறுதலாய் இருக்கிறது. அவர் வார்த்தையைக் கவனியுங்கள், ‘‘நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் கர்த்தருக்கு அடையாளங்களாகவும் அற்புதங் களாகவும் திகழ்கிறோம்’’ எத்தனை அற்புதமான சாட்சி பார்த்தீர்களா! அந்த சாட்சியை நாம் பெற்றிட வேண்டாமா!

சிலர் பிள்ளைகளை சாட்சியாக வளர்க் கிறார்கள். தங்களையோ மாற்றிக் கொள்ள மனதில்லாமல் மடிகிறார்கள். ஏசாயா ‘நானும்’ என்று சொன்னது போல நாமும் சாட்சியாக இருத்தல் வேண்டும். நமது பிள்ளைகளை சாட்சியாக வளர்த்தல் வேண்டும்.

குடும்பங்களைக் குறித்து எழுதுவதும் பிரசங்கிப்பதும் எளிது. ஆனால் பிரச்சினைகளில் பிராயச் சித்தம் காண்பது அரிது என்று அனுபவப்பூர்வமாகவே அறிவேன். ஆகிலும் அமைதலுள்ள ஆவிக்குரிய குடும்பம் நடத்த சாத்தியமில்லை என்று எவரும் சொல்ல முடியாது.

ஆவியானவர் கலகத்தின் தேவனாயிராமல் சமாதானத்தின் தேவனாயிருக்கிறார். பரலோகக் குடும்பத்தின் நடு நாயகனாகிய இயேசு கிறிஸ்துவை நமது இல்லங்களுக்கு அழைப்போம் அமரச்செய்வோம்.

அதிகாரத்தை அவரிடத்தில் கொடுத்துவிட்டு அடிமை நானய்யா ஆலோசனை தாருமையா என்று கேட்டு வழி நடப்போம். அப்பொழுது கேட்டின் மகன் ஓடிப் போவான்.

குடும்பங்களில் பிரச்சனை வரலாம். ஆனால் பிரச்சினையே குடும்பமாக்கி விடாதீர்கள். நினைப்பதற்கு நாம் ஒன்றுமில்லை என்று உங்களுக்கு நினைப்பு வந்தாலேபோதும் நிர்மலமான குடும்பம் நிஜமாய் வந்திடும், நிர்மூலமாக்கும் பிரச்சனைகள் நில்லாமல் ஓடி விடும்.

இயேசு வந்த வீட்டில் சந்தோஷமே !

இயேசு வந்த வீட்டில் சமாதானமே!

இயேசு வந்த வீட்டில் ஆசீர்வாதமே!

இயேசு வந்த வீட்டில் ஆரோக்கியமே!



## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**